விலை ரூபா: 15.00

*Registered as a Newspaper in Srilanka*

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: பன்னிரண்டு

சங்கு 08 வள்ளுவர் ஆண்டு 2039 கார்த்திகை 30 திங்கட்கிழமை (15.12.2008) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 361




# இலங்கை இனப்பிரச்சினையில் அடுத்த வருடம் ஐ.நா.தலையிடும்!

## புதிய தூதுவரின் நியமனம் ஏற்படுத்துமாம்

(நியூயோர்க்)

இலங்கையில் இடம்பெற்றுவரும் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் 2009 ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபை கூடுதல் அக்கறை செலுத்தக் கூடிய சாத்தியக் கூறுகள் இருப்பதால் ஐ.நா.நேரடியாகத் தலையிடும் என தகவல்கள் வெளியாகியுள்ளன. (12ஆம் பக்கம் பார்க்க)

## தமிழக மக்கள் பிழையாக வழி நடத்தப்படுகின்றனர்

### பாதுகாப்புச் செயலாளர் கூறுகிறார்

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு ஆதரவான சில அரச சார்பற்ற நிறுவனங்களினால் தமிழக மக்களுக்கு பிழையான தகவல்கள் வழங்கப்பட்டுள்ளதாக பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

புலி ஆதரவாளர்கள் இலங்கை தொடர்பான பிழையான கருதுகோள்களை தமிழக மக்கள் மனதில் விதைத்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

படையினர் விடுதலைப் புலிகளுக்கு எதிராக மேற் (12ஆம் பக்கம் பார்க்க)

## ஆட்களைக் கடத்தி கப்பம் கோரிய மூன்று பொலிஸார் கைதாகினர்

(கொழும்பு)

கொழும்பில் சிலரைக் கடத்தி மிரட்டி கப்பம் கேட்டதாகவும் அரச கட்டுப்பாடற்ற பகுதிகளுக்கு சில தகவல்களை வழங்கியதாகவும் கூறப்படும் பொலிஸ் அதிகாரி ஒருவர் உட்பட மூன்று பொலிஸார் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இது தொடர்பில் பொலிஸ்துறைப் பேச்சாளர் ரஞ்சித் குணசேகர கூறியதாவது,

பொலிஸாருக்கு சில முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதன் அடிப்படையில் ஒரு அதிகாரி உட்பட மூன்று பொலிஸார் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஆட்களைக் (12 ஆம் பக்கம் பார்க்க)

## இந்திய அரசின் செய்தியுடன் இலங்கைக்கு வருகிறார் முகர்ஜி

### ஆங்கில நாளேடு தகவல்

(கொழும்பு)

இந்த வாரத்தில் இலங்கை வரும் இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் பிரணாப் முகர்ஜி இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பான இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கின் மிகவும் காத்திரமான வலியுறுத்தல் செய்தியை எடுத்துவருவார் என இலங்கையின் ஆங்கில செய்தித்தாள் ஒன்று தெரிவித்துள்ளது.

அதேநேரம் (12 ஆம் பக்கம் பார்க்க)

## வன்னிக் களமுனைகளில் வலுவடையும் விடுதலைப் புலிகளின் பாரிய எதிர்ப்புகள்

(கொழும்பு)

வன்னியில் படையினர் நிலங்களைப் கைப்பற்றினாலும் தமிழீழ விடுதலைப் புலிகளின் பாரிய எதிர்ப்புகளை எதிர்கொள்ள வேண்டியுள்ளதாக பாதுகாப்பு ஆய்வாளர் இக்பால் அத்தாஸ் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சியில் கடந்த புதன்கிழமை அன்று 57-வது படைப்பிரிவினர் முன்னேறும் நடவடிக்கைகளை மேற்கொண்டபோதும் தமிழீழ விடுதலைப் புலிகளின் எதிர்ப்புக் காரணமாக பழைய நிலைகளுக்கே திரும்பியதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் பாரிய எதிர்ப்புக் காரணமாகவே கிளிநொச்சியை மீளக் கைப்பற்றும் நடவடிக்கைகள் தாமதமாகின்றன.

எனினும் படையினரின் மனோநிலை தொடர்ந்தும் (02ஆம் பக்கம் பார்க்க)

## ஐ.தே.க கூட்டணியை உருவாக்கத் திட்டம்

(கொழும்பு)

மாகாண சபைத்தேர்தல்களின் போது கூட்டணியொன்றை உருவாக்கி அதன் மூலம் போட்டியிட ஐக்கிய தேசியக் கட்சி தீர்மானித்துள்ளது.

இதன்படி, கூட்டணி அமைப்பது குறித்த நடவடிக்கைகளில் ஐக்கிய தேசியக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்கள் முனைப்புக் காட்டி வருவதாகத் (12ஆம் பக்கம் பார்க்க)

## வன்னி படை நடவடிக்கைக்காக எட்டாவது படையணி உருவாக்கம்

(கொழும்பு)

நடவடிக்கை படையணி ஐந்து எனப்படும் 65-வது டிவிசனை உருவாக்கும் முயற்சிகளில் படைத்தரப்பு ஈடுபட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. இது தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது,

நடவடிக்கை படையணி ஐந்து (Task Force-V) எனப்படும் 65-வது டிவிசனை உருவாகும் முயற்சிகளில் படைத்தரப்பு ஈடுபட்டுள்ளது. இந்த (12ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கை மீது போர் தொடுக்க வலியுறுத்துகிறார் வைகோ

(சென்னை)

இலங்கை மீது போர் தொடுக்க வேண்டும் என வை.கோபாலசாமி இந்திய மத்திய அரசிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இலங்கையில் போர் நிறுத்தம் செய்ய வலியுறுத்தி அம்பத்தூர் உழவர் சந்தையில் உண்ணாவிரதம் நடைபெற்றது. தமிழ் இலக்கியப்பேரவை (12ஆம் பக்கம் பார்க்க)

## திரவக்கழிவு முகாமைத்துவம்

கழிவு நீர், மழைநீர் தேங்கி நிற்குமிடங்களில் நுளம்புகள் பெருகும். இதனால் நுளம்புகள் மூலம் பரவும் பின்வரும் நோய்கள் பரவலாம்.

- டெங்குக் காய்ச்சல்
- மலேரியா
- சிக்குன்குனியா
- யப்பானிய மூளைக்காய்ச்சல்

எனவே வீடுகளிலும், வீதியோரங்களிலும், பொது இடங்களிலும் கழிவுநீர் வெள்ள நீர் தேங்காது பார்த்துக் கொள்ள வேண்டும்.

-வீட்டுச் சுற்றாடலிலும், பொது இடங்களிலும் பொலித்தீன் பைகள், தகரப் பேணிகள், பிளாஸ்ரிக் கொள்கலன்கள், தேங்காய்ச் சிரட்டைகள், இளநீர்க் கோம்பைகள், பழைய ரயர்கள் போன்ற சிறிய கொள்கலன்களில் மழை நீர் தேங்கி நின்று நுளம்புகள் பெருகலாம். எனவே இவற்றைப் புதைக்க வேண்டும் அல்லது எரிக்க வேண்டும்.

-நீர்த் தொட்டிகளிலுள்ள நீரைஅடிக்கடி மாற்ற வேண்டும்.

-பூச்சாடிகள், பீலிகளில் நீர் தேங்கி நிற்காது பார்த்துக் கொள்ள வேண்டும்.

-வீட்டிற்கு வெளியேயுள்ள தேவையற்ற பாத்திரங்களை கவிழ்த்து வைக்க வேண்டும்.

-வீட்டுச் சுற்றாடலிலுள்ள பற்றைகளை வெட்டிச் சுத்தம் செய்யுங்கள்.

சுகாதாரத் திணைக்களம், யாழ்ப்பாணம்.

அனுசரணை CARE International

(C-1814)

**நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்**

# பலாலியில் உள்ள தபாலகத்தில் பல மில்லியன் ரூபாய் மோசடி!

## தபால்மா அதிபர் தெரிவிப்பு

(கொழும்பு)

பலாலி இராணுவ முகாமிலிருக்கும் அஞ்சல் அலுவலகத்தில் நடந்திருக்கும் பல மில்லியன் ரூபாய் பண மோசடி குறித்து விசாரிப்பதற்கு அஞ்சல் திணைக்களத்தின் விசாரணை அதிகாரிகள் குழுவொன்று குடாநாட்டுக்கு வந்துள்ளதாக தபால்மா அதிபர் தெரிவித்தார்.

இராணுவ முகாமுக்குள் அமைக்கப்பட்டிருக் கும் அஞ்சல் அலுவலகத்தில் பணியாற்றும் சில அதிகாரிகளால் 30 மில்லியன் ரூபாயுக்கும் அதிகமான பணம் மோசடி செய்யப்பட்டிருப்பது கண்டுபிடிக்க ட்டுள்ளது.

இவ்வாறான சம்பவம் நடந்திருப்பது இதுவே முதற்தடைவையல்ல. இதற்கு முன்னரும் இதைப்போன்ற பல சம்பவங்கள் திணைக்களத்தில் நடந்துள்ளன. கடந்த இரண்டு வருடங்களாக இந்த மோசடி தொடர்ந்துள்ளது. இந்தவருடத்தில் இது இரண்டாவது தடைவையாக நடந்திருக்கும் மோசடிச் சம்பவம் என தபால்மா அதிபர் எம்.கே.பி.திஸ்ஸநாயக்க கொழும்பு ஊடகமொன்றிடம் தெரிவித்தார்.

பலாலி தபாலகத்திலிருந்து 9 மில்லியன் ரூபாய் பணம் மோசடி செய்யப்பட்டிருப்பதற்கான ஆதாரங்களடங்கிய ஆவணங்களை விசாரணை அதிகாரிகள் இதுவரை சேகரித்திருப்பதாக அவர் கூறினார்.

அவற்றைக்கொண்டு விசாரணைகள் நடத்தப்படுவதாகக் குறிப்பிட்ட தபால்மா அதிபர், சேகரிக்கப்பட்ட ஆவணங்கள் மேலதிக விசாரணைகளுக்காக பொலிஸாரிடம் ஒப்படைக்கப்படும் எனத் தெரிவித்தார்.

பலாலி தபாலகத்தில் நடைபெற்றிருக்கும் மோசடிகள் குறித்து 2008ஆம் ஆண்டு ஆரம்பத்திலேயே தபால் திணைக்களத்துக்குத் தெரியவந்ததாகவும் அதனைத் தொடர்ந்து அங்கிருந்த தபால்நிலையப் பொறுப்பதிகாரியை வேறிடத்துக்கு மாற்றியதாகவும் கூறப்படுகிறது. எனினும் யாழ்.குடாநாட்டில் காணப்படும் மோசமான சூழ்நிலை காரணமாக அங்கு செல்வதற்கு எவரும் விரும்பவில்லையென தபால் திணைக்கள வட்டாரங்கள் கூறுகின்றன.

(ச-5)

## கருணா-பிள்ளையான் மீண்டும் முறுகல்

(கொழும்பு)

கருணா அணியினருக்கும் பிள்ளையான் அணியினருக்கும் இடையில் மீண்டும் முறுகல் நிலை ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. கட்சியை புனரமைப்பது தொடர்பிலேயே இந்த முறுகல் ஏற்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

தாம் இந்த கூட்டத்தை விரைவில் நடத்தவுள்ளதாகவும், அதற்கு நாடாளுமன்ற உறுப்பினர் கருணாவை அழைக்கவுள்ளதாகவும், பிள்ளையானின் பேச்சாளர் அசாத் மௌலானா தெரிவித்துள்ளார்.

எனினும் கருணாவின் பேச்சாளரான டி.கமலநாதன் இந்த கூட்டத்தை கருணாவே ஏற்பாடு செய்துள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

கட்சியின் தலைவர் என்ற அடிப்படையில் கருணாவே இந்தக் கூட்டத்திற்கான அழைப்பை விடுத்துள்ளதாக அவர் குறிப்பட்டுள்ளார்.

(எ-5)

## காணாமல் போயுள்ள ஜனாதிபதி ஆணைக் குழுக்கள்

(கொழும்பு)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவினால் உருவாக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழுக்கள் எதுவித முன்னேற்றமும் இன்றி காணாமல் போய் உள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது, அனைத்துலகத்தின் அழுத்தங்களை சமாளிப்பதற்காக மகிந்த ராஜபக்ஷவினால் உருவாக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழுக்கள் எந்தவித பலனையும் கொடுக்காது காணாமல் போய் உள்ளன.

இந்த குழுக்களின் முன்னைய பரிந்துரைகளை அரசு மதிக்கவில்லை என்பதை தொடர்ந்து அவற்றின் செயற்பாடுகள் முடக்கநிலையை அடைந்திருந்தன.

தற்போது அவை தொடர்பாக எந்தவித தகவல்களும் இல்லை என பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி குற்றம் சுமத்தியுள்ளது.

அரசினால் அமைக்கப்பட்ட இத்தகைய எட்டு ஆணைக்குழுக்களுக்கு அரசு 130 மில்லியன் ரூபாய்களை செலவு செய்திருந்தது.

மகிந்த அரசின் காலப்பகுதியில் மனித உரிமை மீறல்கள்,நீதிக்குப் புறம்பான படுகொலைகள்,கடத்தல்கள் என்பன அதிகரித்ததனால் அரசின் மீது அனைத்துலகத்தின் அழுத்தங்கள் அதிகரித்திருந்தன.

எனினும் அவற்றில் இருந்து தப்பிக்கும் நோக்கத்துடன் அரசு இத்தகைய ஆணைக் குழுக்களை அமைந்திருந்தது குறிப்பிடத்தக்கது.

(ச-5)

## ஜனாதிபதியாவதை எவராலும் தடுத்து நிறுத்தி விடமுடியாது

### எஸ்.பி.திஸாநாயக்க தெரிவிப்பு

(கொழும்பு)

இந்த நாட்டின் ஜனாதிபதியாக நான் தெரிவு செய்யப்படுவதை எந்த சக்தியாலும் தடுத்து நிறுத்த முடியாதென ஐக்கிய தேசியக் கட்சியின் தேசிய அமைப்பாளரும்,மத்திய மாகாண முதலமைச்சர் வேட்பாளருமான எஸ்.பி.திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

கரு ஜெசூரிய பதவி விலகியதனைத் தொடர்ந்து சில சிரேஷ்ட சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள் அரசாங்கத்தில் இணைந்து கொள்ளுமாறு அழைப்பு விடுத்ததாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

பிரதிநிதியமைச்சர் உள்ளிட்ட பல முக்கிய பொறுப்புக்களை தாம் வகித்துள்ளதாகவும், இதன் மூலம் தமது அரசியல் ஆற்றலை மதிப்பீடு செய்து கொள்ள முடியும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

தாம் ஒருபோதும் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவிற்கு அச்சுறுத்தலாக அமையவில்லைஎனஅவர்சுட்டிக்காட்டியுள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் 53ஆவது பொதுச் சபைக் கூட்டத்தில் நான் மேடையேறிய போது மக்கள் அளித்த ஆதரவின் மூலம் எனக்கு மக்கள் மத்தியில் காணப்படும் செல்வாக்கை தெளிவாக விளங்கிக்கொள்ள முடியும் என அவர் தெரிவித்துள்ளார்.

எதிர்காலத்தில் இந்த நாட்டின் ஜனாதிபதியாக நான் மாறுவதனை எவராலும் தடுக்க முடியாதெனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர்.ஜயவர்த்தன தனது 70 களில் ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டார். எனவே நானும் அவசரப்படப் போவதில்லை என எஸ்.பி.திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

(ச-5)

---

## வன்னிக் களமுனைகளில்...

உயர்ந்த மட்டத்தில் இருப்பதாக படை அதிகாரி யொருவர் தெரிவித்துள்ளார்.

முகமாலையின் முதலாம் நிலை முன்னரங்குகள் கைப்பற்றப்பட்டபோதும் இரண்டாம் நிலை முன்னரங்குகளில் கடும் பயிற்சி பெற்ற தமிழீழ விடுதலைப் புலிப் போராளிகள் இருப்பதாக ஊடகங்களுக்கு தகவல் வெளியிடமுடியாத இராணுவ உயர் அதிகாரி தெரிவித்ததாக இக்பால் அத்தாஸ் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் நாகர்கோவில், கிளாலி மற்றும் கண்டல் ஆகிய இடங்களில் தமிழீழ விடுதலைப் புலிகளின் ஊடுருவல்கள் இருக்கலாம் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அக்கராயனில் நிலைகொண்டுள்ள 57-வது படைப்பிரிவினர் கிளிநொச்சியை நோக்கி முன்னேறும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர். அத்துடன் அவர்கள் இரணைமடு தாங்கி வரையிலும் முன்னேறியுள்ளனர்.

அதிரடிப்படையினரின் மூன்றாவது விசேட படைப்பிரிவு ஏ-9 வீதியின் நெடுங்கேணியின் ஒரு கிலோமீற்றர் தொலைவில் நிலைகொண்டிருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சியை படையினர் கைப்பற்றுவதற்கு எதிராக தமிழீழ விடுதலைப் புலிகள் பாரிய எதிர்ப்புகளை காட்டி வருவதாக தெரிவித்துள்ள இக்பால் அத்தாஸ், முல்லைத்தீவின் தெற்குப் பகுதியில் படையினர் பாரிய எதிர்ப்புகளை சந்திக்க வேண்டிவரும் என படைத்தரப்பைக் கோடிட்டுத் தெரிவித்துள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு தொடர்ந்தும் ஆயுத விநியோகங்கள் உரிய முறையில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்நிலையில் அவர்களைப் பற்றி அதிக மதிப்பீடுகளை நாம் தெரிவிக்கவில்லை என்றும் அவர்கள் பெருமளவிலான நிலங்களை இழந்துள்ளபோதும் தமது போரிடும் ஆற்றலை இழக்கவில்லை என இக்பால் அத்தாஸ் தெரிவித்துள்ளார்.

**தொடர்ந்தும் முயற்சி**

இதேவேளை கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு நோக்கி முன்னேற முயற்சிக்கும் படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் தொடர்ந்தும் மோதல்கள் இடம்பெற்று வருகின்றன.

கிளிநொச்சி முறிகண்டியிலும், முல்லைத்தீவு தண்ணீரூற்று தெற்குப் பகுதிகளிலும் தற்போது நிலைகொண்டுள்ள படையினர் புலிகளின் நிலைகள் மீது கடும் ஷெல் மற்றும் ஆட்டிலறி தாக்குதல்களை நடத்தியவாறு முன்நகர்ந்து வருவதாக இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் உதய நாணயக்கார தெரிவித்தார்.

புலிகளால் மேற்கொள்ளப்படும் கடும் எதிர்த்தாக்குதல்களுக்கு மத்தியில் அப்பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ள மணல் மேடுகள் பலவற்றை தகர்த்தவாறே இந்த முன் நகர்வு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அவர்கூறினார்.

இது தொடர்பில் இராணுவப் பேச்சாளர் மேலும் கூறியதாவது, கிளிநொச்சியில் அடம்பன், முல்லைத்தீவின் ஒலுமடு கிழக்கு, குமுழமுனை ஆகிய பகுதிகளை நோக்கியே படையினரின் முன் நகர்வு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இம் முயற்சியினை எதிர்கொண்டு முறியடிக்கும் வகையில் புலிகளால் நடத்தப்பட்ட எதிர்த் தாக்குதல்களில் படைத்தரப்புக்கு சேதம் ஏற்பட்டுள்ள அதேவேளை படையினரின் பதில் தாக்குதல்களில் புலிகளும் பாரிய இழப்புக்களை எதிர்நோக்கியுள்ளனர்.

நேற்றுக் காலை முதல் மாலைவரையில் பல தடவைகள் மேற்படி பிரதேசங்களில் உக்கிரமடைந்த இருதரப்பு மோதல்களையடுத்து படையினரால் சோதனை நடவடிக்கை ஒன்று மேற்கொள்ளப்பட்டது.

குமுழமுனை பகுதியில் நடத்தப்பட்ட சோதனை நடவடிக்கையில் கடற்புலிகளுக்குச் சொந்தமான தற்கொலைப் படகு ஒன்று உட்பட மேலும் சில ஆயுதப் பொருட்கள் மீட்கப்பட்டுள்ளன என்றார்.

(ச-5)

## புதிய அடையாள அட்டைதயாரிப்பு பாகிஸ்தானிடம் வழங்குவது ஆபத்து

இலங்கையர்களுக்கு நுண் நறுவலுடன் (Micro Chip) கூடிய புதிய தேசிய அடையாள அட்டையை வழங்கும் ஒப்பந்தத்தை பாகிஸ்தானிய நிறுவனத்திடம் கையளிப்பது ஆபத்தானதாக அமைந்துவிடும் என ஊழல்களை கண்காணிக்கும் அமைப்பு எச்சரித்துள்ளது.

இலங்கையில் புதிதாக வழங்கப்பட விருக்கும் நுண் நறுவலுடன் கூடிய அடையாள அட்டையை தயாரிக்கும் ஒப்பந்தம் பாகிஸ்தானிய நிறுவனம் ஒன்றிடம் கையளிக்கப் படவிருப்பதாக சுட்டிக்காட்டியிருக்கும் ஊழல்களை கண்காணிக்கும் அமைப்பின் பேச்சாளர், இதனால் இலங்கை யர்கள் பற்றிய தகவல்கள் கசிவதற்கான சாத் தியக்கூறுகள் இருப்பதாகத் தெரிவித்தார்.ஒரு நாட்டின் பிரஜைகளின் தகவல்கள் அடங்கிய விபரங்கள் பிறிதொரு நாட்டுக்குச் செல்வது பற்றி அவதானமாக இருக்க வேண் டும். இது ஆபத்தானது என ஊழல்களை கண்காணிக்கும் அமைப்பு வட்டாரங்கள் கூறுகின்றன.

அடையாள அட்டைகளைத் தயாரிப்பதில் தேர்ச்சி பெற்ற உள்ளூர் நிறுவனங்கள் இலங்கையில் இருப்பதாகவும் அந்த அமைப்பு தெரிவித்துள்ளது.

அத்துடன் இலங்கைக்கு புதிய தேசிய அடையாள அட்டையை தயாரிக்கும் ஒப்பந்தத்தை பாகிஸ்தானிடம் வழங்கினால் அது இந்தியாவை அதிருப்திக்குள்ளாக்கும் எனவும் சுட்டிக்காட்டப்படுகிறது.

இதேவேளை புதிதாக தயாரிக்கப்படவிருக்கும் நுண் நறுவலுடன் கூடிய வாகனச் சாரதி அனுமதிபத்திரத்திற்கு விண்ணப்பிப்பவர்கள் தற்பொழுது செலுத்தும் கட்டணத்தைவிட 3 மடங்கு அதிகரித்த கட்டணத்தை செலுத்த வேண்டி ஏற்படும் எனத் தெரிய வருகிறது.

இதுவரை காலமும் சாரதி அனுமதிப்பத்திரத்தைப் பெறுவதற்கு 510 ரூபா மாத்திரமே செலுத்தவேண்டியுள்ளது. புதிய அனுமதிப்பத்திரம் வழங்கப்படுமாயின் ஆயிரத்து 740 ரூபாயைச் செலுத்த வேண்டிய நிலை தோன்றும் எனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. எனினும் நுண்நறுவலுடன் கூடிய சாரதி அனுமதிப்பத்திரத்திற்காக பொதுமக்களிடம் ஆயிரத்து 340 ரூபாயை அறவிட மோட்டார் வாகனத் திணைக்களம் தீர்மானித்திருப்பதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

(ச-5)

## இலங்கை அதிகாரிகள் மீது படுகொலைக் குற்றச்சாட்டு

### அமெரிக்கா தீர்மானம்

அமெரிக்க பிரஜைகளான இலங்கை அதிகாரிகளுக்கு எதிராக எதிர்வரும் ஜனவரி முதல் வாரத்தில்அமெரிக்க நீதித் திணைக்களத்தில் தமிழர் மீதான இனப்படுகொலைக் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்படவுள்ளதாக அமெரிக்காவின் முன்னாள் பிரதி சட்டமா அதிபர் புரூஸ் பெய்ன் தெரிவித்துள்ளார். இந்தத் தகவலை தமிழ் நெற் இணையத்தளம் பிரசுரித்துள்ளது. அமெரிக்காவின் 18 யூஎஸ்சி 1091 ஆம் சட்டப்படி இந்தக்குற்றச்சாட்டுக்கள் சமர்ப்பிக்கப் படவுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையின் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ மற்றும் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா ஆகியோருக்கு எதிராகவே இந்தக் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படவுள்ளதாக பெய்ன் குறிப்பிட்டுள்ளார்.

கோத்தபாய ராஜபக்ஷ அமெரிக்கப்பிரஜை, சரத்பொன்சேகா அமெரிக்கப் நிரந்தர வதிவிடப் பிரஜை என்ற அடிப்படையிலேயே இந்தக் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளன. (ச-5)

# இன்று ஒரு தகவல்

## அளவுக்கு மிஞ்சினால் ...!

அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சு என்று சொல்வார்கள் அது உண்மைதான்.

ஒருவருக்கு அளவுக்கு மீறிய புகழ் வந்து விட்டாலும் அது ஆபத்தில் முடிவதுண்டு.

பழங்காலத்தில் கிரேக்க தேசத்தில் ஒரு பழக்கம் இருந்ததாம்.

அதாவது யாராவது ஒருவரை நாடு கடத்த வேண்டும் என்று மக்கள் விரும்பினால் அவரது பெயரை ஒரு மட்பாண்ட ஓட்டுச் சில்லில் எழுதி அதை ஒரு குறிப்பிட்ட பொது இடத்தில் போட்டு விட வேண்டும் அவ்வளவு தான்.

அந்த ஓட்டுச் சில்லு குவியலில் யாருடைய பெயர் அதிகமாக இருக்கிறதோ அந்த நபரை பத்து ஆண்டுகள் நாடு கடத்தி விடுவார்கள். அது அந்த நாட்டு பழக்கம்.

ஒரு நாள் அந்தக் குவியலுக்குப் பக்கத்தில் ஒருவன் நின்று கொண்டிருந்தான். அவன் கையில் ஒரு ஓட்டுச் சில்லு வைத்துக் கொண்டிருந்தான். அதில் யாரோ ஒருவருடைய பெயரை எழுதி அந்த இடத்தில் போட வேண்டும் என்று ஆசை.

ஆனால் அவன் படிக்காதவன். அதனால் எழுதத் தெரியவில்லை. அந்த வழியால் யாராவது போகிறார்களா என்று பார்த்துக் கொண்டிருந்தான்.

ஒரு பெரியவர் வந்து கொண்டிருந்தார். அவரிடம் ஓடிப் போய் கையிலிருந்த மட் பாண்டச் சில்லைக் கொடுத்து "ஐயா இதில் ஒரு பெயரை எழுதிக் கொடுங்கள் " என்றான். அந்தப் பெரியவர் அதை வாங் கிக் கையில் வைத்துக் கொண்டு " இதில் என்ன பெயரை எழுத வேண்டும் " என்று கேட்டார்.

" அரிஸ்டைடிஸ் என்று எழுதுங்கள்" என்றான் அவன்.

இதைக் கேட்டதும் அந்தப் பெரியவருக்கு அதிர்ச்சியாக இருந்தது. ஏனெனில் அவர் தான் தத்துவ மேதை அரிஸ்டைடிஸ்.

இருந்தாலும் தான்தான் அவர் என்பதை காட்டிக் கொள்ளாமலே அவனிடம் "அது சரி... அரிஸ் டைடிஸ் உனக்கு என்ன கெடுதல் செய்தார்? எதற் காக அவரது பெயரை எழுதச் சொல்கிறாய்?" என்று கேட்டார்.

" அவர் எனக்கு எந்தவொரு கெடுதலும் செய்யவில்லை. அவரை நான் பார்த்தது கூடக் கிடையாது" என்றான் அவன்.

" அப்படியானால் எதற்காக அவரை நாடு கடத்த வேண்டும் என்று நீ ஆசைப்படுகிறாய்?" என்று கேட்டார் அரிஸ் டைடிஸ். " அரிஸ்டைடிஸைப் பற்றி எல்லோரும் அவர் நல்லவர் , பெரிய அறிவாளி , வள்ளல் ,பேரறிஞர் என்று பேசிக் கொள்கிறார்கள். இப்படி எல்லோரும் சொல்வதைக் கேட்ட எனக்கு அலுத்து விட்டது. அதனால் தான் வெறுப்பாகி விட்டேன்." என்றானாம்.

இதிலிருந்து என்ன தெரிகிறது? நாம் நல்லவ னாக இருப்பதில் ஒன்றும் இடைஞ்சல் இல்லை. ஆனால் நம்மை நல்லவன் நல்லவன் என்றுஎல்லோரும் சொல்ல ஆரம்பித்தார்களானால் இடைஞ்சல் ஆரம்பம் என்று அர்த்தம். எதுவும் அள வுக்கு மிஞ்சிப் போகாமல் பார்த்துக் கொள்ள வேண் டியதும் மிகவும் அவசியம்!

அளவுக்கதிகமாக ஆசைப்படாதவர்களில் ஆபிரகாம்லிங்கனும் ஒருவர்.

அவர் ஒரு தடவை தன்னுடைய நண்பர்களிடம் பேசிக் கொண்டிருந்தாராம். அப்பொழுது ஒருவர் " ஒரு மனிதனுக்கு கால்கள் எவ்வளவு உயரம்இருக்க வேண்டும்?" என்று கேட்டராம்.

இதற்கு ஆபிரகாம்லிங்கன் " அது என்ன... இடுப்பிலிருந்து தரையைத் தொடும்அளவுக்கு உயரம் இருந்தால் போதும்!" என்றாராம்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

## நடை பெற்று வரும் க.பொ.த சாதாரண பரீட்சையில்

# கணித பாட வினாத்தாள் மாணவர்களை பாதித்துள்ளது

## இலங்கை ஆசிரியர் சங்கம் குற்றச்சாட்டு

(கொழும்பு)

நாடளாவிய ரீதியில் தற்போது நடைபெற்று வரும் க.பொ.த சாதாரணதரப் பரீட்சையில் நேற்று முன்தினம் நடை பெற்ற புதிய பாடத்திட்டத்திற்கு அமைவான கணித பாட வினாத்தாள் மாணவர்களைப் பாதித்துள்ளதாக இலங்கை ஆசிரியர் சங்கம் குற்றஞ் சாட்டியுள்ளது.

இது தொடர்பில் இலங்கை ஆசிரியர் சங்கத்தின் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்துள்ளதாவது,

நடை பெற்றுவரும் க .பொ.த சாதாரண தரப் பரீட்சையில் புதிய பாடத்திட்டத்திற்குரிய கணித பாட வினாத்தாள் சிறந்த திறமையான பரீட்சாத்திகளுக்கு கூட வரை யறுக்க பட்ட கால நேரத்தினுள் நிறைவு செய்ய முடியாதநிலை ஏற்பட்டுள்ளது.

இந்தப் பரீட்சை வினாத்தாள் போன்ற மாதிரி வினாத்தாள் மாணவர்களுக்கு எந்தக் கட்டத் திலும் விநியோகிக்கப்படவில்லை.

குறிப்பாக கேத்திர கணித வினாக்களுக்கு மேலதிக தாள் உபயோகிக்கக் கூடாதென எழு த்து மூலமாக மாணவர்கள் வேண்டப்பட்டுள்ளனர்.

கல்விப் பொதுத்தரா தர சாதாரண தரப்பரீட்சையில் மிக அவசியமான கணித பாடம் தொடர்பாக பரீட்சைகள் திணைக்களம் மிக அவதானத்துடன் செயற்பட்டிருக்க வேண்டும் என்றார்.

பரீட்சை ஆணையாளர் சமாளிப்பு

இதேவேளை கணித பாட வினாப் பத்திரம் தொடர்பாக எழுந்துள்ள குற்றச்சாட்டுகள் தொடர்பாக பரீட்சை கள் ஆணையாளர் நாயகம் அனுர எதிரி சிங்க தெரிவித்துள்ளதாவது,

அந்த வினாப்பத்திரம் முறையாக தயாரிக்கப்பட்டுள்ளது. தேசிய கல்வி ஆணைக்குழுவின் பரிந்துரைக்கமைய இந்த வினாப்பத்திரத்தை ஒத்த மாதிரி வினாப்பத்திரங்கள் ஏற்கனவே மாணவர்களுக்கு விநியோகிக்கப்பட்டது.

எவ்வாறாயினும்புதிய பாட விதானம் ஒன்று அறிமுகப்படுத்தப்படும் சந்தர்ப்பங்களில் இத்தகைய சிக்கல்கள் ஏற்பட வாய்ப்புள்ளது என்றார் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம். (5)

# இலவச பாட நூல்கள் 81 வீதமானவையே யாழ்.பாடசாலைகளுக்கு அனுப்பி வைப்பு

(யாழ்ப்பாணம்)

2009 ஆம் ஆண்டுக்குரிய இல வச பாட நூல்கள் யாழ். மாவட்ட பாடசாலைகளுக்கு 81 வீதமானவையே கிடைக்கப் பெற்றுள்ளதாகவும் மிகுதி 19 வீதமான பாட நூல்கள் விரைவில் அனுப்பி வைக்கப்படுமெனவும் வடக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் வீ. இராசையா தெரிவித்தார்.

பாடசாலை மாணவர்களுக்கு அடுத் தாண்டுக்குரிய இலவச பாட நூல்கள் கடந்த 5ஆம் திகதி சகல மாணவர்களுக்கும் கிடைக்கக் கூடியவாறு கல்வி அமைச்சு அனுப்பி வைத் திருந்தது.

எனினும், யாழ். மாவட்டத்திற்கு 81 வீதமான பாட நூல்களே கிடைக்கப் பெற்றுள்ள தாகவும் மிகுதி19 வீதமான பாட நூல்கள் யாழ்ப் பாண த்திற்கு எடுத்து வருவதற்கு கல்வி வெளி யீட்டுத் திணைக்களத்தில் தயாராகவுள்ளதாகவும் வடக்கு மாகாண கல்விப் பணி ப்பாளர் குறிப்பிட்டார்.

எனினும், மிகுதி பாட நூல்களை எடுத்து வருவதற்கு கப் பல் ஒழுங்கு செய்து தரப்படாததால் தாமதமாகுவதாகவும் கப்பலில் இட வசதி கிடைத்தவுடன் யாழ்ப்பாணத்திற்கு அனுப்பி வைக்கப்படு மெனவும் வடக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் வீ. இராசையா மேலும் தெரிவித்தார். (5)

## இராசி பலன்

15.12.2008
(கார்த்திகை 30, திங்கட்கிழமை)
புநர் பூசம் பிற்பகல் 12. 36மணிவரை
திருதியை பிற்பகல்4.39 மணிவரை
இராகுகாலம் 7.52- 9.22மணிவரை
சுபநேரம் 12.22- 1.52மணிவரை

| | |
|---|---|
| மேடம் | தனவிரயம்,கல்வியில் ஆர்வம், மனச் சஞ்சலம், எடுத்த காரியம் தாமதமாகும். |
| இடபம் | நற்கீர்த்தி,மனோ தைரியம், காரிய நன்மை, கூட்டு முயற்சி. |
| மிதுனம் | மனோ சங்கடம், அதிக செலவு, ரோக நிலை, திடீர் நன்மை. |
| கடகம் | மாதர் நட்பு , வெகுமானம்,நல்ல முயற்சி,தெய்வ சிந்தை. |
| சிங்கம் | உஷ்ண நிலை, பிறருக்கு உதவுதல், காரிய தாமதம், சுப செலவு. |
| கன்னி | நண்பர்கள் சந்திப்பு, சயனசுகம், தனதானிய சேர்க்கை, ஆனந்தம். |
| துலாம் | ஆரோக்கியம் , பெரியோரால் மதிக்கப்படுதல், காரியசித்தி, நன்கொடை. |
| விருச்சிகம் | நிலை மாற்றம், புத்திரரால் கவலை, பிரயாணம், பண விரயம். |
| தனுசு | அபகீர்த்தி, காரிய தடங்கல், தர்மம், போசன சுகம். |
| மகரம் | நல்ல முயற்சி, தனலாபம், உறவினர் சந்திப்பு, பிறருக்கு உதவுதல், |
| கும்பம் | காரிய அனுகூலம், கீர்த்தி, போசன சுகம், உற்சாகம். |
| மீனம் | தாழ்வு நிலை, முயற்சி தாமதம், தனவிரயம், போசனசுகம். |

வளவன்

# மாணவர்களுக்கான சீருடைத் துணிகள் கப்பல் மூலம் எடுத்து வரப்பட்டன

(திருகோணமலை)

2009ஆம் ஆண்டு கல்வியாண்டுக்குரிய பாடசாலை மாணவர்களுக்கான இலவச சீருடை துணிகள் கப்பல் மூலம் எடுத்து வரப்பட்டுள்ளன. வடக்கு மாகாண கல்விப்பணிப்பாளர் வீ. இராசையா தெரிவித்தார்.

தற்போது கப்பலிலிருந்து இறக்கப்பட்டு வருவதாகவும் சில தினங்களில் வலயக் கல்விப் பணிப்பாளர்கள் ஊடாக பாடசாலைகளுக்கு அனுப்பி வைக்கப்படுமெனவும் அவர் கூறினார்.

இச் சீருடைத் துணிகளை மாணவர்களுக்கு வழங்கும் திகதி குறித்து வலயக் கல்விப் பணிப்பாளர்களினால் தீர்மானிக்கப்படுமெனவும் வடக்கு மாகாண கல்விப்பணிப்பாளர் மேலும் தெரிவித்தார். (5)



சிறுவர் பாதுகாப்பு நிதியத்தால் சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் நடத்தப்பட்ட முன்பள்ளி ஆசிரியர்களுக்கான பயிற்சியில் இணைந்து கொண்ட கொடிகாமம் அன்னை திரேசா முன்பள்ளி ஆசிரியை பத்மநாதன் கலைமதிக்கு யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் சான்றிதழ் வழங்கு வதைப் படத்தில் காணலாம்.

## அவசர சிகிச்சை தொடர்பான பயிற்சிகள்

(மருதங்கேணி)

உலக சுகாதார ஸ்தாபனத்தின் ஏற்பாட்டில் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை ஊழியர்களுக்கு அவசர சிகிச்சை தொடர்பான பயிற்சி வகுப்பு நடத்தப்பட்டு வருகிறது.

தொடர்ந்து 10 நாட்கள் இடம்பெற்று வரும் இப் பயிற்சி வகுப்பில் 10 தாதி உத்தியோகத்தர்களும் 10 பரிசாரகர்கள் மற்றும் இரண்டு அம்புலன்ஸ் சாரதிகளும் கலந்துகொண்டு பயிற்சி பெற்று வருகின்றனர். (5-6-35)

## செல்வச் சந்நிதியில் பஜனை நிகழ்வு

(மருதங்கேணி)

தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலயச் சூழலில் அமைந்துள்ள சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டுப் பேரவையினால் பிரதி வெள்ளிக்கிழமை தோறும் நடத்தப்பட்டு வரும் ஆன்மீக நிகழ்ச்சித் தொடரில் எதிர்வரும் 19 ஆம் திகதி வெள்ளிக் கிழமை முற்பகல் 10.30 மணிக்கு முருக பக்தர்களால் பஜனை நடத்தப்படும். (5-6-35)

## காலம் கடந்த பிறப்பு, இறப்பு பதிவு செய்தல்

(சாவகச்சேரி)

தென்மராட்சிப் பிரதேச செயலகப் பிரிவில் இதுவரை பிறப்புச் சான்றிதழ் பெறாதவர்கள் நலன் கருதி காலம் கடந்த பிறப்பு பதிவு தொடர்பான நடமாடும் சேவை இம் மாதம் 23 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9 மணி முதல் 12 மணிவரை சாவகச்சேரிப் பிரதேச செயலகத்தில் நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

எனவே காலம் கடந்த பிறப்பு, இறப்பு பதிவினை மேற்கொள்வோர் எதிர்வரும் 19 ஆம் திகதிக்கு முன்னர் சாவகச்சேரி பிரதேச செயலக மேலதிக மாவட்ட பதிவாளர் அலுவலகத்தில் தொடர்புகொண்டு மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ளுமாறு மேலதிக மாவட்டப் பதிவாளர் கேட்டுள்ளார். (5-29)




## யாழ்.செய்திகள்

## கோழிக் குஞ்சுகள் விநியோகம்

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி கால்நடை வைத்திய அதிகாரி அலுவலகத்தினால் திறந்து வளர்க்கக் கூடிய கலப்பின ஒருநாள் கோழிக் குஞ்சுகளும் 3 கிழமை காடைக் குஞ்சுகளும் விற்பனை செய்யப்படவுள்ளது.

எதிர்வரும் ஜனவரி முதல் விநியோகிக்கப் படவுள்ள இக் குஞ்சுகளைப் பெற்றுக்கொள்ள விரும்புவோர் முற்பணம் செலுத்தி தமது பதிவுகளை மேற்கொள்ளலாம் என கால்நடை வைத்திய அதிகாரி தெரிவித்துள்ளார்.

கலப்பினக் குஞ்சு ஒன்று 60 ரூபா வீதமும் காடைக் குஞ்சு ஒன்று 100ரூபா வீதமும் விற்பனை செய்யப்படவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். (5-6-29)

## அழிவடைந்த மரங்களுக்கு பதிலாக புதிய மரக்கன்றுகளை நட தீர்மானம்

(யாழ்ப்பாணம்)

குடாநாட்டில் கடந்த மாதம் வீசிய 'நிஷா' புயல் காற்றினாலும் பெரு வெள்ளத்தினாலும் அழிவடைந்துள்ள பயன்தரும் மரங்களை ஈடுசெய்யும் வகையில் மரக் கன்றுகளை நடுவதற்குயாழ். விவசாய விரிவாக்கப் பணிப்பாளர் நடவடிக்கை எடுத்துள்ளார்.

சூறாவளிக் காற்று அனர்த்தத்தினால் குடாநாட்டில் பல வருடங்கள் பழமை வாய்ந்த பயன்தரும் வேம்பு , இலுப்பை , புளி போன்ற மரங்கள் அழிவடைந்துள்ளன. இதனால் எதிர்கால சந்ததியினருக்குப் பாரிய பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

இந்த இழப்பை ஈடுசெய்யும் வகையில் அழிந்துபோன மரங்களுக்குப் பதிலாக வான் பயிர்களான புளி, வேம்பு, இலுப்பை, சமண்டலை போன்ற மரங்களையும் பழப் பயிர் வகையான மா, பலா,பப்பாசி, தேசி போன்ற மரங்களும் மீண்டும் நடுகைசெய்யப்படவிருக்கின்றது.

இதற்கான சகல ஒழுங்கு களையும் யாழ். விவசாய விரிவாக்கப் பணிப்பாளர் மேற்கொண்டுள்ளார். (5-6)

## வெள்ள அனர்த்தத்தினால் தென்மராட்சியில் பெருமளவு கால்நடைகள் பாதிப்பு

(சாவகச்சேரி)

தென்மராட்சி பிரதேசத்தில் கடந்த மாத இறுதியில் ஏற்பட்ட கடும் மழை-புயல் காற்றினால் பெருமளவு கால்நடைகள் அழிவடைந்துள்ளதாக சாவகச்சேரி கால் நடை வைத்திய அதிகாரி தெரிவித்தார்.

குறித்த அனர்த்தத்தினால் சாவகச்சேரி கால்நடை வைத்திய அதிகாரி அலுவலகத்துக்கு இதுவரை கிடைத்த பதிவுகளின் படி 582 மாடுகளும் 435 ஆடுகளும் 83 செம்மறி ஆடுகளும் மற்றும் 4ஆயிரத்து 778 கோழிகளும் இறந்துள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

தொடர்ந்து பதிவுகளை மேற்கொண்டு வருவதனால் மேலும் கால்நடைகளின் அழிவு தொடர்பான எண்ணிக்கை அதிகரிக்குமெனவும் சாவகச்சேரி கால்நடை வைத்திய அதிகாரி கூறினார். (5-6-29)

## யாழ்.மாவட்டத்தில் வெள்ள அனர்த்தத்தினால் பாடசாலைகளுக்கு ஏற்பட்ட அழிவு 63 மில்லியன் ரூபாய்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் கடந்த மாதம் இறுதியில் ஏற்பட்ட கடும் மழை -புயல் காரணமாக பாடசாலைகளுக்கு ஏற்பட்ட அழிவு 63 மில்லியன் ரூபாய் என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளதாக வடக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் வீ.இராசையா தெரிவித்தார்.

யாழ்.மாவட்டத்திலுள்ள 5 கல்வி வலயங்களிலிருந்தும் பெறப்பட்ட அழிவுகளின் படி 63 மில்லியன் ரூபாய் இழப்பு மதிப்பீடு செய்யப்பட்டதாகவும் அவர் கூறினார்.

எனினும் இவ் அனர்த்தத்தினால் பாடசாலைகளுக்கு ஏற்பட்ட சிறிய சேதங்களை திருத்துமாறு வலயக் கல்விப் பணிப்பாளர்களுக்கு தாம் அறிவித்துள்ளதாக, பாரிய சேதங்கள் ஏற்பட்ட பாடசாலைகள் தொடர்பில் உரிய நடவடிக்கை எடுப்பதாகவும் வடக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் குறிப்பிட்டார். (5)

## இலவச மருத்துவ சேவை வழங்கிய வைத்திய கலாநிதி

(யாழ்ப்பாணம்)



சுன்னாகம் கிழக்கு சன சமூக நிலையத்தில் அண்மையில் நடத்தப்பட்ட குழந்தைகளுக்கான இலவச மருத்துவ முகாமில் நுவரெலியாவில் இருந்து வருகை தந்த குழந்தை வைத்திய நிபுணர் வைத்திய கலாநிதி க.சிவகுமார் கலந்து கொண்டு இலவச மருத்துவ சேவைகளை வழங்கியுள்ளார்.

சுன்னாகம் கிழக்கு சன சமூக நிலையத்தினரால் ஏற்பாடு செய்யப்பட்ட இம் மருத்துவ முகாமில் பலர் இணைந்து பயன்பெற்றுள்ளனர்.

இலவச மருத்துவ சேவையுடன் மருந்து வகைகளையும் இலவசமாக வழங்கியுள்ள வைத்திய கலாநிதி க.சிவகுமார், மிகுதி மருந்து வகைகளை யாழ்.போதனா வைத்திய சாலைக்கு அன்பளிப்புச் செய்துள்ளார். (5-6)

## உலர் உணவு விநியோகம்

(சாவகச்சேரி)

தென்மராட்சிப் பிரதேசத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு நலன்புரி முகாம்களில் தங்கியுள்ளவர்கள் தவிர்ந்த ஏனையோருக்கு ஒருவார காலத்திற்கான உலர் உணவு விநியோகம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கிராமசேவகரால் குறிப்பிடப்படும் ப.நோ.கூ.சங்கங்களில் பொருட்களைப் பெற்றுக் கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது. (5-6-29)

## புற்றுநோய் தொடர்பில் டாக்டர் ஜெயக்குமாரன் பேருரை

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் நடைபெறும் பேராசிரியர் மகேஸ்வரனின் நினைவுப் பேருரையில் இன்று திங்கட் கிழமை பிற்பகல் 2மணிக்கு " Chemical carcinogenesis and its possible impact in Jaffna pennisula" எனும் தலைப்பில் புற்றுநோய் சம்பந்தமான பேருரையை வைத்திய கலாநிதி ஜெயக்குமாரன் நிகழ்த்தவுள்ளார்.

ஆர்வலர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு இரசாயனவியற்றுறைத் தலைவர் கலாநிதி இ.ஸ்ரீகரன் கேட்டுக் கொண்டுள்ளார். (5-6)

## ப.நோ.கூ.சங்கங்களூடாக உருளைக்கிழங்கு விநியோகம்

### வழங்கற்கட்டளைகளைப் பெற்றுக்கொள்ளவும்

(யாழ்ப்பாணம்)

யால கப்பல் மூலம் யாழ்.மாவட்டத்திற்கு எடுத்துவரப்பட்ட உருளைக்கிழங்கு பல நோக்கு கூட்டுறவுச் சங்கங்கள் ஊடாக வழங்கப்படவுள்ளதாக யாழ்.செயலக திட்டப் பணிப்பாளர் ம.பிரதீபன் அறிவித்துள்ளார்.

சகல பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்களும் இன்று பிற்பகல் 1 மணிமுதல் மாவட்ட புனர்வாழ்வு புனரமைப்புச் செயலகத்திலிருந்து உருளைக்கிழங்கிற்கான வழங்கற் கட்டளைகளைப் பெற்று களஞ்சியத்திலிருந்து உருளைக்கிழங்கை ஏற்றிக் கொள்ளுமாறு அவர் கேட்டுள்ளார். (5)

## தென்மராட்சிப் பிரதேச ஓய்வூதியர்களுக்கு

(சாவகச்சேரி)

தென்மராட்சிப் பிரதேச செயலகத்தில் ஓய்வூதியம் பெறுபவர்களிடமிருந்து உயிர் வாழ் அத்தாட்சிப்பத்திரம் திரட்டப்படுகிறது.

டிசம்பர் மாத ஓய்வூதிய பற்றுச் சீட்டுடன் இதற்கான படிவத்தினைப் பூர்த்திசெய்து கிராம அலுவலரின் அத்தாட்சிப்படுத்தலுடன் ஜனவரிமாதம் 15ஆம் திகதிக்கு முன்னர் பிரதேச செயலர் ஓய்வூதியக் கிளையில் கையளிக்குமாறு பிரதேச செயலர் செ. ஸ்ரீநிவாசன் தெரிவித்துள்ளார்.

குறித்த காலப் பகுதிக்குள் படிவத்தைச் சமர்ப்பிக்காத ஓய்வூதியர்களுக்கு 2009 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் தொடக்கம் ஓய்வூதியம் வழங்குவது நிறுத்தப்படுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (5-29)



சர்வதேச எயிட்ஸ் தினத்தை முன்னிட்டு யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களத்தால் நடத்தப்பட்ட திறந்த கட்டுரைப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில் வழங்கும் நிகழ்வில் யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் உரையாற்றுவதை முதலாவது படத்திலும், போட்டியில் முதலாம் இடத்தைப்பெற்ற ப.இராஜேஸ்வரனுக்கு வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரனும் மூன்றாம் இடத்தைப் பெற்ற மா.நிமலனுக்கு சேவாலங்கா மன்ற இணைப்பாளர் ஆர். கேசவனும் ஆறுதல்பரிசு பெற்ற யோ.தேவமதிக்கு தாய் சேய்நல வைத்திய அதிகாரி திருமதி திருமகள் சிவசங்கர் பரிசில்கள் வழங்குதை ஏனைய படங்களிலும் காணலாம்.

# இலங்கையில் தமிழர் 12

5. அமெரிக்கப் பல்கலைக்கழகமாகிய சிகாகோப் பல்கலைக்கழகத்தின் தொல்லியலாய்வுத் திட்டம் 1980-84. இது தொல்காலத் துறையாகிய மாதோட்டத்தைப் பற்றிய, பேரா சிரியர் ஜோன் காஸ்வெல் தலைமையில், மார்தா பிரிக்கெட் என்பவருடைய உதவியுடன் நடத்தப்பட்ட முற்றுப்பெறாத அகழ்வாய்வு.

6. களனியாப் பல்கலைக்கழகத்தின் தொல்லியல் ஆய்வு நிறுவனம் (PGIAR) இப்பன்கட்டுவ என்னும் இடத்தில் ஆதி இரும்புக் காலத்தளவொன்றில் நடத்திய அகழ்வாய்வு 1988-1991 இற்குப் பேராசிரியர் சேனக பண்டாரநாயக தலைமைதாங்கினார்.

7.பிரித்தானிய அனுராதபுரத் தொல்லியல் ஆய்வுத் திட்டம் 1990-1991 அனுராதபுரத்தில் ஸல்கஹவத்த என்ற இடத்தில் பிரித்தானியத் தொல்லியலாய்வாளர்களாகிய பேராசிரியர் எவ்.ஆர்.ஆல்ச்சின், கலாநிதி றொபின் கோனிங்ஹம் மற்றும் சிலர் நடத்திய அகழ்வாய்வு.

மேற்கூறிய அகழ்வாய்வுகளின் கண்டுபிடிப்புக்களும் முடிவுகளும் இந் நூலை எழுதும்போது உருவாகிய கண்ணோட்டங்களுக்கு வழிவகுத்தன.

### தொல்லியலும் அரசியலும்

வேறும் பல நாடுகளில் நடப்பது போல, இலங்கையிலும் கவலைக்குரிய வகையில் தொல்லியல் சான்றுகளுக்குக் கொடுக்கப்படும் விளக்கங்கள் அரசியலைப் பின்னணியில் வைத்துக் கொடுக்கப்படுவதைக் காணலாம்.

தொல்லியல் சார்ந்த சில முக்கிய ஆய்வுகளில், சிக்கலான சில விடயங்கள் மிகவும் இலகுபடுத்தப்பட்டு, அரசியல் நோக்குடையோர் குறுகிய மனப்பான்மையுடன் அவற்றைப் பயன்படுத்தக் கூடிய வகையில் கருத்துக்கள் வெளியிடப்பட்டுள்ளன. எடுத்துக்காட்டாக இதனைக் குறிப்பிடலாம். இலங்கையில் தொல்லியல் சான்றுகள் வரலாற்றுத் தொடக்க காலத்தில் பல்வகைப்பட்ட பண்பாடுகள் நிலவியதைக் காட்டுகின்றன.

எனினும் இந்நிலைக்கு முக்கியத்துவம் கொடுக்காது, தனியொரு பண்பாடு அக்காலத்திலிருந்து இலங்கையில் நிலவியதைக் காட்டுவதற்கான வகையிலே சிலரால் தொல்லியல் சான்றுகள் பயன்படுத்தப்பட்டுள்ளன.

முற்காலத்தில் நிலவிய முழு நிலையையும் தொல்லியல் சான்றுகளின் துணையுடன் காட்ட முயல்வதற்குப் பதிலாகக் குறிப்பிட்ட ஓர் இனக் குழுவுக்குச் சார்பான சான்றுகளை மட்டும் காணமுயல்வது தொல்லியலாளரை ஓர் அபாயப் பொறியினுள் அகப்பட்ட வைக்கும் முயற்சியாய் முடிந்துவிடும். அப்பொறியிலிருந்து பின்னர் வெளியேறுவது கடினம். இத்தகைய முயற்சியைக் கைவிட முடியாது.

தொல்லியலாளர் செயற்பட்டு, சில சான்றுகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கும் போது, அரசியல்வாதிகள் அவற்றை அபகரித்துத் தங்கள் அரசியல் நோக்கங்களுக்காகப் பயன்படுத்துவர். இது இந்தியா மற்றும் ஜப்பான் போன்ற நாடுகளில் நடக்கும் சில தொல்லியல் ஆய்வுகள் தொடர்பாகத் தெரிவிக்கப்பட்ட ஒரு கருத்தாகும். இது இலங்கையில் நடைபெறும் சில ஆய்வுகளைப் பொறுத்தும் கூறக்கூடியது.

இத்தகைய நிலையை வேறு நாடுகளிலும் காணலாம். ஐரோப்பாவில் தேசியவாதம் மேலோங்கியிருந்த காலத்தில், மத்திய ஐரோப்பாவில் தொல்லியல் ஆய்வு நடத்தியோர் எவ்வாறு தாம் பெற்ற சான்றுகளுக்கு விளக்கம் கொடுக்குமிடத்து தத்தம் தேசிய உணர்வுகளையும் பக்கச் சார்புகளையும் வெளிப்படுத்தினர் என்பதைப் பேராசிரியர் நோர்மன் டேவிஸ் விளக்குகிறார்.

(ஜெர்மன் பிரதேசமாகிய) பிரஷ்யாவின் கிழக்கெல்லை நிலத்தில் காணப்பட்ட வரலாற்றுக்கு முற்பட்ட கால அமைப்புகள் ஜெர்மானிய இனத்தவருடைய என ஐயத்துக்கிடமின்றிப் பிரஷ்யத் தொல்லியலாளர் நிரூபிப்பர். சில தசாப்தங்களின் பின் அவற்றை ஒத்த தொல்பொருட்களை ஆய்வுசெய்யும் போலந்தைச் சேர்ந்த தொல்லியலாளர் அவை விவாதத்துக்கு இடமின்றித் தொடக்கத்தில் இருந்தே ஸ்லாவோனிய இனத்தவர் உடையவை என உறுதிப்படுத்துவர். இந்த இரு தரப்பினருள் ஒரு தரப்பினராவது மேற்குறிப்பிடப்பட்ட அமைப்புக்கள் கெல்டிக் இனத்தவருடனும் ஓரளவு தொடர்புடையவையா என்று வினவவில்லை.

இவ்வாறே இலங்கையிலும் தொல்லியலாளர் ஒன்றுக்கொன்று முரணான கருத்துக்களைத் தொல்லியல் சான்றுகளின் அடிப்படையில் தெரிவித்துள்ளதைப் பொறுத்து வெளிநாட்டுத் தொல்லியலாளர் ஒருவர், கலாநிதி றொபின் கோனிங்ஹம், பின்வருமாறு தன் கருத்தினை எடுத்துரைத்துள்ளார்.

இலங்கை வரலாற்றின் மொழிசார் அடித்தளமாக அமைவது இந்து ஆரிய மொழி என்று கூறுவோரும் ஆதித் திராவிட மொழி என்று கூறுவோரும் (தரணியகல 1992:743;இரகுபதி 1987:202) கருத்திற் கொள்ளத் தவறுவது என்னவெனில் மொழி மாற்றங்கள் மக்கள் மாற்றங்கள் இல்லாது நடைபெறலாம் என்பது.

கவலைக்குரிய வகையில் இனக்குழுப் போராட்டத்தின் விளைவாக அரசியல் ஒரு பாரதூரமான வகையில் தொல்லியலைப் பாதிக்கின்றது.

பேராசிரியர்
கா. இந்திரபாலா

வேறொரு நாட்டில் அல்லது இன்னொரு காலப் பகுதியில் முன்னோரிடமிருந்து பெற்ற விலைமதிக்க முடியாத அருஞ் செல்வமாகப் பேணப்பட வேண்டிய தொல் பொருட்கள் அரசியல் இயக்கங்களில் உள்ளோர் கொண்டுள்ள தப்பெண்ணங்களாலும் அறியாமையாலும் அழிக்கப்படுவதால் திருப்பிப் பெற முடியாத வகையில் இழக்கப்படுகின்றன.

இவ்வாறு தீவிர இனவாத அரசியல் கருத்துக்களுடன் செயற்படுவோர் அரசியல் இயக்கங்களில் மட்டுமன்றி அரசுத் திணைக்களங்களிலும் பிற நிறுவனங்களிலும் இருந்துகொண்டு இந் நடவடிக்கைகளில் ஈடுபடுவதால் தொல்லியல் பெரிதும் பாதிக்கப்படுகின்றது.

(தொடரும்)





வல்வை நகராட்சி மன்றத்தால் நடத்தப்பட்ட முன்பள்ளி ஆசிரியைகள் கௌரவிப்பு விழாவில் வல்வை வடமத்தி விக்னேஸ்வரா மற்றும் பொலிகண்டி மேற்கு விநாயகர் முன் பள்ளி சிறார்களின் கலை நிகழ்வுகளை படங்களில் காணலாம்.

# கல்வியில் சமத்துவமின்மை ஒரு தொடர்கதை 3



சுகாதாரம் கல்வியோடு மிக நெருக்கமாக பிணைப்புள்ள ஒரு காரணியாக இருப்பதோடு இது தொடர்பாக கிராமப் புறப் பெண்களின் கல்வி மிகவும் முக்கியமானதாகும். சுகாதாரம்,போசாக்கு, குடும்பத் திட்டம் ஆகியன கல்வியோடு பிணைந்திருப்பதோடு இவை யாவற்றையும் இணைத்தல் கிராம அபிவிருத்தியில் பல்வகைத் தாக்கங்களையும் உண்டுபண்ணும். (உலகவங்கி 1975, ஹரிசன் 1983)

ஒரு தேசத்தின் அபிவிருத்தியில் முக்கிய பங்களிப்பாக மனித வளங்கள் முக்கியமானவை. இது கல்வியியலாளர்களால் (ஹாபின் சன் 1973) வலியுறுத்தப்படுகிறது. மனித வளங்கள் ஏனைய காரணிகளை உருவாக்கி உந்துவிக்கும் செயலாற்றல் மிக்க விசையாகும்.மனித திறன்களே இவ்விசையின் அடிப்படையாகும்.

மனித வளங்களை அபிவிருத்தி செய்யும் சக்தி வாய்ந்த நிறுவகப்படுத்தப்பட்ட பொறிமுறையை கல்வி முறைமை அமைக்கிறது. இதனைக் கொள்கையாகக் கொண்டு சர்வசன ஆரம்பக் கல்வியை அடைவதற்காக அர்ப்பணிப்பு முழுமையாக மேற்கொள்ளப்படுகிறதா? என்பதே இன்றைய முக்கிய வினாவாகும்.

### இசைவாக்கமின்மை

முறைசார் கல்விக்காக பல தசாப்தங்களைச் செலவிட்டும் பல கோடி டொலர்களைச் செலவிட்டும் செலவிடப்பட்ட பணத்திற்கு ஒப்பீடாக வளர்முக நாடுகளில் சராசரிப் பிரசையின் நிலை மேம்படவில்லை என்பது உலக வங்கியின் அறிக்கையாகும். இதன்படி இலங்கையும் இவ்விடயத்துக்குள் அடங்குகின்றது.

அபிவிருத்திக்குத் தேவையான அடிப்படைத் திறன்களை யாவரும் அடைவதற்கு எம் மாற்றங்கள் தேவை? உண்மையில் முறை சார் கல்வி தனிநபர்களின் விழுமியங்கள், மனப்பாங்குகள், ஆர்வங்கள் ஆகியவற்றில் பெருந் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

ஒரு நாட்டின் கல்வி முறைமையின் மீது இயற்கையும், அபிவிருத்தி முறையின் அமைப்பும் பெருமளவு செல்வாக்குச் செலுத்துகின்றன. கல்வி எம் நாட்டில் அரசாங்க மீள் செலவுகளில் பெரும்பங்கை உறிஞ்சுவதோடு பெருந்தொகையான வளர்ந்தோரினதும், பிள்ளைகளினதும் காலத்தையும் , செயற்பாடுகளையும் எடுக்கிறது.

அத்துடன் அபிவிருத்தி ஆர்வலர்களில் அதியுயர் உளவியல் சுமைகளையும் சுமக்கிறது. எனவே மக்களின் பொருளாதார தேவைகளுக்கும் ஆர்வத்திற்கும் பொருந்தக் கூடியவாறு கல்வி முறையை இசைவாக்குவதற்கான பெருந்தேவை ஏற்பட்டுள்ளது.

தேசிய அபிவிருத்தி தொடர்பாக கல்வியில் மிகக்கூடிய குறை சீராக்கம் அதிகமாக கிராமப்புற ஆரம்பப் பாடசாலைகளிலே காணப்படுகின்றது. உண்மையில் இவ் இசைவின்மை சமநிலைகளுடன் தொடர்புபட்டனவாகும்.

சிலருக்கு இந் நாட்டிலுள்ள கல்வி முறைமை வருமான சமனிலிகளைக் குறைப்பதற்குப் பதிலாக அதிகரிப்பதற்கு தொழிற்படுகிறது.

வருமான பரம்பலின் மேல் முறைசார் கல்வி செலுத்தும் இத் தாக்கத்திற்கான அடிப்படைக் காரணம் ஒருவரின் மட்டத்திற்கும் அவரது வாழ்நாள் வருமானத்துக்கும் இடையேயுள்ள நேர் இணையேயாகும். இவ்வாறு மெய்மையில் சில காரணங்களுக்காக வறியோருக்கு உயர் கல்விக்கான வாய்ப்புகள் மறுக்கப்படுவதோடு உண் மையில் கல்வி முறைமையே கல்வியில் சமனிலையை உருவாக்கியுள்ளது.

வறியவர்களே கல்வி முறையை விட்டு முதலில் வெளியேறுகிறவர்கள். ஏனெனில் அவர்கள் வாழ்வதற்காக உழைக்க வேண்டியுள்ளது.

தம்பியப்பா காங்கேசபிள்ளை
முன்னாள் அதிபர்
பலாலி ஆசிரியர் கலாசாலை


தமது பிள்ளை நிலையான எளிய தொழிலொன்றைப் பெற்றுக்கொள்வதற்கு போதுமான கல்வியை வழங்குவதற்கு வறியவர்களுக்கு முடியாதிருப்பதோடு தமது பிள்ளைக்கு இலவசக் கல்வி முறையிலிருந் தும் இடைநிலைக் கல்வியைப் பெற்றுக் கொடுக்கவும் முடியாதிருகின்றது.

இதனால் வறியோருக்கு தமது கிராமத்தில் ஆரம்பக் கல்வியைப் பெறும் நம்பிக்கை மறைந்துவிடுகிறது.

(தொடரும்)

# பெண்கள் மட்டும் படிக்கும் பல்கலைக்கழகம் சவுதி அரேபியாவில் அமைக்க திட்டம்

பெண்கள் மட்டும் படிக்கும் உலகின் மிகப் பெரிய பல்கலைக்கழகத்தை சவுதி அரேபியாவில் அமைக்க அந் நாட்டு மன்னர் அப்துல்லா விரைவில் அடிக்கல் நாட்டவுள்ளார். ரியாத்தில் இப் பல்கலைக் கழகம் 2010இல் கட்டி முடிக்கப்படும் போது உலகின் மிகப் பெரிய உயர் கல்வி நிறுவனமாக இது இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.



இப் பல்கலைக்கழகம் சவுதியின் தலைநகருக்கு அருகில் சுமார் 80 இலட்சம் சதுர அடிப்பரப்பில் அமையவுள்ளது. இதன் கீழ் 13 கல்லூரிகள் இயங்கவுள்ளன. இப் பல்கலைக்கழகம் தொடர்பான உயர் மட்ட அறிவுரை கிடைத்தவுடன் வெளிநாட்டு இன்ஜினியரிங் கல்வி நிறுவனங்கள் பலவற்றுடன் ஆலோசனை நடத்தப்பட்டது உலகத் வாய்ந்ததும் 40 ஆயிரம் மாணவர்கள் படிக்கக் கூடியதுமான பல்கலைக்கழகத்தை தொடங்க பூர்வாங்க பணிகள் நடத்தப்பட்டுள்ளன.

பெண்களுக்கான சிறப்பு கல்வி வளாகங்களில் இது பெரியதாக இருக்கும் என சவுதி அரேபியாவின் நிதியமைச்சர் தெரிவித்துள்ளார். அடுத்த இரு ஆண்டுக ளில் இது முழுமையாக செயல்படத் தொடங்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. இப் பல் கலைக்கழக கல்லூரிகளில் மருத்துவம், பல் மருத்துவம், நர்சிங், இயற்கை வைத்திய முறை, மருந்தியல் துறை போன்ற படிப்புக்கள் இருக்கும் எனத் தெரிகிறது.

வளைகுடாப் பகுதியில் உள்ள பெண்களுக்கான புதிய யுகம் உருவாகியுள்ளதாக சவுதி அரேபிய அரசு வட்டாரங்கள் கருத்து தெரிவித்துள்ளன. இதனை உலகின் பிரசித்தி பெற்ற கல்வி நிறுவனமாக மாற்றுவதுடன் ஆராய்ச்சிப் படிப்புக்களுக்காக உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பல்கலைக்கழகங்களுடன் உடன் பாடுகளும் எட்டப்பட்டு வருகின்றன.

இப் பல்கலைக்கழகம் தொடர்பான ஆலோசனைகளை சவுதி அரேபியாவின் லேபர், தொழில், வணிகம், பொருளாதாரம், திட்டம் போன்ற அமைச்சரவைகளுடன் நடத்திடும் முயற்சியும் முடுக்கிவிடப்பட்டுள்ளன.

# சார்க் மாணவர்களுக்காக இந்தியாவில் உருவாகும் தெற்காசிய பல்கலைக்கழகம்

கடந்த 2005 ஆண்டு தாகாவில் நடை பெற்ற சார்க் மாநாட்டில் தெற்காசிய பல்கலைக் கழகம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து இந்திய பிரதமர் மன்மோகன் சிங் யோசனை தெரிவித்தார்.



2007ஆம்ஆண்டில் இந்த பல்கலைக்கழகம் அமைப்பதற்கான ஒப்பந்தத்தில் சார்க் அமைப்பில் உள்ள இந்தியா, பாகிஸ்தான், இலங்கை, நேபாளம், பூட்டான், மாலைதீவுகள், ஆப்கானிஸ்தான் ஆகிய நாடுகளின் பிரதிநிதிகள் கையெழுத்திட்டனர்.

டில்லியில் இந்திராகாந்தி தேசிய திறந்த நிலைப் பல்கலைக்கழகம் அருகே மைதான்கார்கி என்ற இடத்தில் தெற்காசியப் பல்கலைக்கழகம் அமைப்பதற்கான இடம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இந்த இடத்தை டில்லி வளர்ச்சி ஆணையத்திடம் பெறுவதற்கு வெளியுறவு அமைச்சகம் இந்திய ரூபாய் மதிப்பில் 75 கோடியை அளிக்கவுள்ளது. இப் பல்கலைக்கழகத்தின் இதர செலவுகளை சார்க் உறுப்பு நாடுகள் பகிர்ந்துகொள்ளும்.

டில்லியில் ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகம் அருகே இப் பல்கலைக் கழகத்தின் திட்ட அலுவலகம் அமைக்கப் பட்டுள்ளது.

இந்தப் பல்கலைக்கழகத்தின் சட்ட விதிமுறைகள் பாடத்திட்ட உருவாக்கம் பல்கலைக்கழக வளாகத்தை உருவாக்குதல் போன்ற பல்வேறு பணிகளை இத்திட்ட அலுவலகம் மேற்கொள்ளும் இப் பல்கலைக்கழக உருவாக்கத்திற்காக தலைமைச் செயல் அதிகாரியாக (சி.இ. ஓ ) ஜி.கே. சாதா நியமிக்கப்பட்டுள்ளார். அவருக்கு உதவ நிபுணர் குழுவும் ஏற்படுத்தப்பட்டுள்ளது.


டில்லியில் தொடங்கப்படும் தெற்காசியப் பல்கலைக்கழகத்தில் 5 ஆயிரம் மாணவர்கள் சேர்க்கப்படுவர் .இப் பல்கலைக்கழகத்தில் பெரும்பாலும் சார்க் நாடுகளைச் சேர்ந்த மாணவர்களே இருப்பார்கள். சார்க் உறுப்பு நாடுகளில் இந்தப் பல்கலைக்கழகத்தின் வளாகங்களை தொடங்கவும் திட்டமிடப் பட்டுள்ளது.

சார்க் நாடுகளைச் சேர்ந்த மாணவர்கள் படிப்பதற்கு உதவியாக இருக்கும் இப் பல்கலைக்கழகம் 2010ஆம் ஆண்டில் செயல்படத் தொடங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்தியாவில் தொடங்கப்படும் முதல் சர்வதேசப் பல்கலைக்கழகம் இது என்பது குறிப்பிடத்தக்கது. சார்க் நாடுகளிடையே நல்லெண்ணத்தையும் நட்புறவையும் வளர்க்க இந்தப் பல்கலைக்கழகம் பேருதவியாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

அறிவுக்கலசம்

# ‘சிடி’யில் ரிப்பிங் செய்வது எப்படி?




## கணனி உலகம்

உங்களுக்கு பிடித்த பாடல்களை கேட்கும் போதெல்லாம் உடனே உங்களுக்கு வேண்டும் என முடிவு செய்து, அதனை எப்படியாவது உங்கள் ஐ-பாட் அல்லது மொபைல் போன் அல்லது கம்யூட்டருக்கு மாற்றவேண்டும் என எண்ணுவீர்கள். அப்போதுதான், உங்கள் நண்பர்கள் சிடியிலிருந்து அதனை ரிப்பிங் செய்திடுங்கள் என்று கூறுவார்கள். ரிப்பிங் எப்படி செய்யலாம்? இதனைத் தெரிந்துகொண்டால்,நீங்களும் ரிப்பிங் சம்பியனாகலாம். ரிப்பிங் குறித்து இங்கே பார்க்கலாம்.

முதலில் rip என்பது சரியாக எதனைக் குறிக்கிறது? சிடி ஒன்றிலிருந்து டேட்டாவைக் கொப்பி செய்து அவற்றின் பார்மட்டுகளை மாற்றி வேறு சிடி அல்லது டிவிடிக்கு கொண்டு செல்வதனை ரிப்பிங் என்கிறோம். இன்றைய கம்யூட்டர் பயனாளர்களிடம் இது பெரும்பாலும் மியூசிக் டேட்டாவினையே குறிக்கிறது. சிடியிலிருந்து இசைப் பாடல்களை வெளியே எடுத்து உங்கள் கம்யூட்டரில் பதிவது தான் ரிப்பிங்.

பொதுவாக இந்த ஃபைல்கள் கொப்பி ஆகையில், .wma என்ற பார்மட்டில் காப்பி ஆகும். ரிப்பிங் குறித்து தெரிந்துகொண்டல் சிடியிலிருந்து மட்டுமல்ல வேறு மீடியாக்களிலிருந்தும், இன்டர் நெட்டிலிருந்தும் பாடல்களை கொப்பி செய்வது எளிதாகும். ரிப்பிங் செய்வதும் எளிதுதான். எப்படி என்பதை பார்ப்போம்.

1.முதலில் இதற்கு விண்டோஸ் மீடியா பிளேயர் பதிப்பு 10 இருக்கவேண்டும் . இதனை திறந்துகொள்ள வேண்டும்.பின் எந்த சிடியிலிருந்து பாடலை ரிப் செய்திட வேண்டுமோ, அதனை சிடி டிரைவில் போட்டு விடவும்.

2.வழக்கம்போல உடனே சிடியில் உள்ள பாடல்கள் இசைக்கத் தொடங்கும். அவ்வாறு பாடல்கள் இசைக்கப்படவில்லை என்றால் File,Open கிளிக் செய்திடுங்கள். அங்கு ‘Look in’ என்ற டேப்பின் கீழாக சிடி டிரைவில் உள்ள சிடியை தேடுங்கள். எந்த மியூசிக் பைல்களை எல்லாம் ரிப்பிங் செய்திட முடிவு செய்கிறீர்களோ அவற்றை எல்லாம் தேர்ந்தெடுக்கவும்.




பின்னர் இவற்றை இயக்க டேபிளை விண்டோஸ் மீடியா பிளேயரில் Open மீது கிளிக் செய்திடவும். இப்போது தோன்றும் திரையின் மேலாக ஆறு டேப்கள் கிடைக்கும். அவை Now Playing,Library, Rip, Burn, Sync and Guide ஆகும். Now Playing பட்டியலில் தற்போது தேர்ந்தெடுக்கப்பட்ட பாடல் பைல்கள் இருக்கும்.

Rip டேப்பினை தேர்ந்தெடுத்துப் பார்த்தாலும், இந்தப் பாடல் பைல்கள் இருக்கும். அனைத்துப் பாடல்களும் வேண்டாம்.சில பாடல் மட்டும் போதும் என்று எண்ணினால் அதற்கும் வழி உள்ளது. ஒவ்வொரு பாடலின் தலைப்புக்கும் பக்கத்தில் ஒரு செக் மார்க் இருக்கும். இந்த ஓப்ஷனை பயன்படுத்தி சிடியில் உள்ள அனைத்துப் பாடல்களையும் கொப்பி செய்திட விரும்பாவிட்டால், நீங்கள் எந்தப் பாடல்களை ரிப்பிங் செய்திட வேண்டுமோ அவற்றை மட்டும் தேர்ந்தெடுக்கலாம். விருப்பப்பட்ட பாடல்களை மட்டும் தேர்ந்தெடுத்தவுடன் ஸ்கிரீனில் வலதுபக்க மூலையில் Rip என்பதில் கிளிக் செய்திட வேண்டும்.பாடல்கள் ரிப் செய்யப்பட்டு கம்ப்யூட்டரில் பதிவாகும்.

இந்த செயல் முடிந்தவுடன் சிடி.யை எஜெக்ட் செய்து வெளியே எடுக்கவும்.நீங்கள் ரிப் செய்த பாடல்கள் அனைத்தும் விண்டோஸ் மீடியா பிளேயரின் லைப்ரரியில் காணப்படும்.லைப்ரரியில் தான் நீங்கள் எந்த நேரமும் தேர்ந்தெடுத்துப் பயன்படுத்துவதற்கான பாடல்கள் இருக்கும்.

லைப்ரரியில் உள்ள பாடல்களை நீங்கள் வழக்கம்போல் உங்கள் விருப்பத்தின்படி வகைப்படுத்தி வைத்துக்கொள்ளலாம். பாடலின் பெயர், பொருள்வகை,மியூசிக் டைரக்டர் என எந்த வகையிலும் வகைப்படுத்தி பைல் செய்து வைத்துக்கொள்ளலாம்.விண்டோஸ் மீடியா பிளேயர் எடிஷன் 10யை http:/www. microsoft.com/windows/windowsme-dia/default.mspx என்ற தளத்தில் டவுண்லோட் செய்து இன்ஸ்டால் செய்திடலாம்.

# இணையத்தளத்தின் அடிப்படை அம்சங்கள்

இணையத் தளங்களின் பயன்பாட்டின் பரிமாணங்கள் தொடர்ந்து பல்வேறு திசைகளில் விரிந்துகொண்டு வருகின்றன. நிறுவனங்கள் மட்டுமே இணையத்தளங்களை தங்கள் தயாரிப்புக்களுக்காகவும் வாடிக்கையாளர்களுக்கு சேவை வழங்குவதற்காகவும் இருந்த நிலை மாறி இன்று தனி நபர்களும் தங்களுக்கெனவும் தங்களுடைய சிறிய அலுவலகங்களுக்கெனவும் இணையத் தளங்களை உருவாக்கி செயல்படுத்தி வருகின்றனர்.

இவர்களுக்கு இணையத்தளங்களை வடிவமைத்துக்கொடுக்க பல வெப்பேஜ் உருவாக்கும் நிறுவனங்களும் தனிநபர் வல்லுநர்களும் செயல்பட்டு வருகின்றனர். இங்கே ஓர் இணையத்தளம் அமைக்கையில் நாம் மேற்கொள்ள வேண்டிய சில முக்கிய அம்சங்களைக் காணலாம்.

### ஹோம் பேஜ்

உங்கள் வெப்சைட்டின் தலைப்பு பக்கம், அதாவது எந்தப் பக்கம் வழியாக அனைத்து தகவல்களையும் தரப்போகிறீர்களோ அந்தப் பக்கம் தான் உங்கள் ஹோம் பேஜ். பொதுவாக இந்த முகப்பு பக்கத்தினை Index.htm அல்லது default.asp என்று அழைப்பார்கள். எனவே இதனை அமைப்பதில் அதிக கவனம் செலுத்த வேண்டும்.ஹோம் பேஜ் லோட் ஆக அதிக நேரம் எடுத்துக்கொண்டால் நிச்சயமாக அதனைக் காண விரும்புபவர்கள் எரிச்சல் அடைந்து ஆர்வம் குறைந்து தளத்தைக் காணும் முயற்சியைக் கைவிடுவார்கள்.

உங்களுடைய தளத்தினைப் பெரும்பாலும் வெளிநாட்டினர்தான் காண விரும்புவார்கள் எனில், இந்த முகப்புப் பக்கத்தின் அளவு 140 கேபிக்குள் இருப்பது நல்லது. இதுவே இலங்கை மக்கள் தான் காண்பார்கள் என்றால் 100 கேபி என்ற அளவிற்குள் இருப்பது நல்லது. இந்த அளவு எச்.டி.எம்.எல். வழி தகவல்,பிளாஷ் மற்றும் அனிமேஷன் ஆகிய அனைத்தையும் சேர்த்ததாக இருக்கவேண்டும்.

### வாடிக்கையாளர் கவனம் ஈர்க்க

எந்தப் பொருளும் மக்களை முதல் பார்வையிலேயே கவரவேண்டும் என்பது பொதுவான ஒரு விடயமாகும். இன்டர்நெற் தளத்தின் ஹோம்பேஜும் அப்படித்தான் இருக்கவேண்டும்.எனவே உங்களைப் பற்றிய தகவல்கள் மக்களின் கவனத்தை ஈர்க்கும் வகையில் எளிமையாக அதேசமயத் தில் தளத்தின் உள்ளே சென்று பார்க்கும் வகையில் அமையவேண்டும்.

### பிளாஷ் வேண்டுமா?

இப்போது பிளாஷ் தொகுப்பு உபயோகிப்பது சர்வ சாதாரணமாகிவிட்டது. ஆனால் இதனைப் பார்ப்பவர்களிடம் வலுக்கட்டாயமாகத் திணிப்பது நல்லதல்ல. இது அதிக நேரம் எடுக்கும். கட்டாயம் பிளாஷ் காட்சி ஒன்று தேவை என்றால் அதனை பார்வையாளர்கள் வேண்டாம் என்று விரும்பினால் ஒதுக்கும் வசதியும் தரப்பட்டிருக்க வேண்டும்.

வெறும் டெக்ஸ்ட் மட்டும் கூட அழகாக அமைக்கப்படலாம் என்பதனையும் கவனத்தில் கொள்ளவேண்டும். தளத்தைக் காண வருபவர்களின் எண்ணிக்கையைத் தெரிவிக்கும் வசதி இருப்பது பலரின் கவனத்தை ஈர்க்கும் உங்கள் தளத்திற்கும் பெருமை சேர்க்கும்.

### தொடர்புகொள்ள

நீங்கள் தரும் தகவல்கள் மிகவும் பயனுள்ளதாக இருக்கலாம். அதனைக் காண்பவர்கள் உங்களிடம் சில விளக்கங்கள் வேண்டி உங்களைத் தொடர்புகொள்ள எண்ணலாம். எனவே எப்படி தொடர்புகொள்ள வேண்டும் என முகப்பு பக்கத்திலேயே குறிப்பிட வேண்டும். உங்கள் மின்னஞ்சல் முகவரி அளிக்கலாம். அல்லது பார்ப்பவரின் கணனியிலுள்ள இ-மெயில் கிளையண்ட் புரோகிராமை இயக்கி நேரடியாக மின்னஞ்சல் அனுப்பும் வசதியையும் ஏற்படுத்தலாம். (தொடரும்)

ஆர்.யூ.பாலமுருகன்

# இந்தியாவின் 2 போர் விமானங்கள் பாகிஸ்தான் எல்லைக்குள் பறந்தன

## பரபரப்புத் தகவல்

(இஸ்லாமாபாத்)

மும்பையில் தாக்குதல் நடத்தியது .பாகிஸ்தானை சேர்ந்த லஷ்கர் -இ-தொய்பா தீவிரவாதிகள் தான் என்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

அவர்களுக்கு பாகிஸ்தான் உளவு அமைப்பான ஐ.எஸ்.ஐ. பயிற்சி கொடுத்து அனுப்பிவைத்துள்ளதெனவும் விசாரணைகளின் மூலம் தெரிய வந்துள்ளது.

இதனால் இந்தியா -பாகிஸ்தான் இடையே போர் மூளலாம் என்ற அச்சம் நிலவுகிறது.

முதல் கட்டமாக பாகிஸ்தானில் உள்ள லஷ்கர்- இ- தொய்பா முகாம்களை இந்திய போர் விமானங்கள் குண்டு வீசி தாக்க திட்டமிட்டுள்ளது.

இதை எதிர்பார்த்து பாகிஸ்தான் இராணுவமும் தயாராகி வருகிறது. எல்லையில் இராணுவத்தைக் குவித்து இருக்கிறது. விமானப் படையும் தயாராக வைக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் இந்தியாவின் 2 போர் விமானங்கள் பாகிஸ்தான் எல்லைக்குள் அத்து மீறி நுழைந்ததாக பாகிஸ்தான் இராணுவம் பரபரப்பு புகார் கூறியுள்ளது.

இது பற்றி பாகிஸ்தான் விமானப்படை தளபதி ஹுமாயூன் விகார் கூறியதாவது,

2இந்திய போர் விமானங்கள் அத்துமீறி பாகிஸ்தான் பகுதிக்குள் நுழைந்தன. ஒரு விமானம் லாகூர் பகுதியிலும் இன்னொரு விமானம் பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீருக்குள்ளும் நுழைந்தன. 2இல் இருந்து 4 நாட்டிக்கல் மைல் தூரம் வரை பாகிஸ் தானுக்குள் வந்து விட்டன.

இது தெரிந்ததும் பாகிஸ்தான் விமானப் படை உஷார் ஆனது. இந்திய விமானத்தை இடை மறிப்பதற்காக எங்களது ஜெட் போர் விமானங்கள் பறந்து சென்றன. உடனே இந்திய விமானங்கள் தங்கள் எல்லை பகுதிக்குள் சென்று விட்டது.

இவ்வாறு ஹுமாயூன் விகார் கூறினார்.

பாகிஸ்தான் தொடர்பாடல் அமைச்சர் ஷெரி ரகுமான் கூறியதாவது,

இந்திய விமானங்கள் அத்துமீறி நுழைந்தது. பற்றி நாங்கள் இந்தியாவிடம் முறைப்படி தெரிவித்து இருக்கிறோம். தவறுதலாக உள்ளே நுழைந்து இருப்பார்களோ என கருதி எங்கள் தகவலை சொல்லி விட்டோம்.

இந்த சம்பவத்துக்கு பின்னர் பாகிஸ்தான் விமானப்படை உஷார்படுத்தப்பட்டுள்ளது. எதையும் சந்திக்கும் திறனுடன் தயாராக உள்ளோம்.

இனி மேல் இது போன்ற சம்பவம் நடக்காது என்று எதிர்பார்க்கிறோம் இவ்வாறு அவர் கூறினார், (5)

## புற்று நோய் செல்களை கொல்லும் புதிய கருவி

நவீன வாழ்க்கை முறையில் மனித குலத்துக்கு சவாலாக விளங்கும் நோய்களில் ஒன்று புற்று நோய். அமெரிக்காவின் கார்னகல் பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர் மைக்கெல் கிஸ் புற்று நோய் செல்களை கொல்லும் புதிய நுண்கருவி ஒன்றை கண்டு பிடித்திருக்கிறார்.

நுண்ணிய குழாய் வடிவிலான இந்த கருவியை ரத்தக் குழாயில் செலுத்தினால் அந்த கருவியில் உள்ள 2 புரோட்டீன்கள் புற்று நோய் செல்களை கண்டுபிடித்து அவற்றை கொன்று விடுகின்றன.

புற்று நோய் கட்டிகள் மேலும் பரவாமலும் இந்த கருவி தடுக்கின்றது என அமெரிக்காவின் கார்னல் பல்கலைக்கழக இணையத் தளம் செய்தி வெளியிட்டிருந்தது. (5)

## 167 தீவிரவாதிகள் பாகிஸ்தானில் கைது

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானில் சமீபத்தில் தடைசெய்யப்பட்ட ஜமாத் உத்தாவா பயங்கரவாத அமைப்பைச் சேர்ந்த 167 பயங்கரவாதிகள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மேலும் பாகிஸ்தான் முழுவதும் பல்வேறு இடங்களில் செயல்பட்டு வந்த அந்த அமைப்பின் அலுவலகங்களுக்கு சீல் வைக்கப்பட்டுள்ளதாகதகவல்கள் தெரிவிக்கின்றன.

இஸ்லாமாபாத் பெஷாவர் கராச்சி மற்றும் லாகூர் ஆகிய இடங்களில் இந்த அதிரடி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மும்மை தாக்குதலில் லஷ்கர்- இ-தொய்பா மற்றும் அதன் முன்னணி அமைப்பான ஜமாத் உத் தவா ஆகியவற்றுக்கு தொடர்பு இருப்பதாக குற்றம் சாட்டிஇந்தியாவிடுத்த வேண்டுகோளை ஏற்று ஐ.நா பாதுகாப்பு சபை சமீபத்தில் ஜமாத் உத்தவாவை தடை செய்தமை குறிப்பிடத்தக்கது. (5)

### புனித போருக்காக செல்கின்றேன்

# மும்பை தாக்குதலில் உயிருடன் பிடிபட்ட தீவிரவாதி இமான் பாகிஸ்தானில் தெரிவிப்பு



(இஸ்லாமாபாதி)

மும்பை தாக்குதலில் கைது செய்யப்பட்டுள்ள அஜ்மல் அமீர் இமான் கடைசியாக தனது சொந்த கிராமத்துக்கு சென்ற போது நான் புனித போருக்காக செல்கிறேன் என கூறியதாக செய்தி வெளியாகியுள்ளது. கடந்த மாதம் 26ஆம் திகதி மும்பையில் நடந்த தாக்குதலில் பாகிஸ்தானை சேர்ந்த பத்து பயங்கரவாதிகள் பங்கேற்றனர்.

இதில் அஜ்மல் அமீர் இமான் மட்டும் உயிருடன் பிடிபட்டான் அவனிடம் பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர். இந் நிலையில் பாகிஸ்தானை மையமாகக் கொண்டு செயல்படும் ஜியோ டிவி அஜ்மல் குறித்து பல புதிய தகவல்கள் வெளியிடப்பட்டுள்ளன.

ஜியோ டிவியில் வெளியான செய்தியில் கூறப்பட்டுள்ளதாவது,

அஜ்மல் அமீர் இமானின் சொந்த ஊர் பாகிஸ்தான் பஞ்சாப் மாகாணத்தில் உள்ள பரித் கோட் என்ற கிராமம் தனது தாயிடம் புனிதப் போருக்காக செல்வதாகவும் ஆசீர்வதிக்கும்படியும் கேட்டுக்கொண்டான். அதே போல் அங்குள்ள பாடசாலையின் முன் ஏராளமான மாணவர்களை திரட்டிய அஜ்மல் புனிதப் போருக்காக செல்லப் போவதாக கூறியுள்ளான். இந்த தகவலை பரித்கோட் மக்கள் சிலர் தெரிவித்தனர். (5)

# உலக அழகி பட்டம் வென்றார் ரஷ்யாவின் செனியா சுகினோவா

(ஜோகன்ஸ்பார்க்)

உலக அழகி போட்டியில் ரஷியாவை சேர்ந்த செனியா முதல் இடம் பிடித்து பட்டம் வென்றார். இந்திய அழகி பார்வதி ஓமன குட்டன், 2-வது இடம் பிடித்தார்.



உலக அழகி பட்டதை வென்ற ரஷ்யாவின் செனியா சுகினோவா, 2ஆவது இடத்தை பிடித்த இந்தியாவின் பார்வதி ஓமனகுட்டன் (இடது) மற்றும் 3ஆவது இடத்தைப் பிடித்த டிரினிடாட் மற்றும் ருபாகா நாட்டைச் சேர்ந்த கேப்ரியல் வால் காட் (வலது).

**உலக அழகி போட்டி**

தென்னாபிரிக்க நாட்டின் ஜோகன்ஸ்பார்க் நகரில் 58ஆவது உலக அழகிப் போட்டி நடை பெற்றது. இந்திய அழகி பார்வதி ஓமனகுட்டன் உள்ளிட்ட 100க்கும் மேற்பட்ட நாடுகளை சேர்ந்த அழகி கள் இந்த போட்டியில் பங்கேற்றனர்.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற இறுதிப் போட்டியில் பங்கேற்ற 5 அழகிகளில் ,இந்திய அழகி பார்வதியும் இடம்பெற்று இருந்தார். உலக அழகி போட்டியின் தேர்வுக்குழு தலைவரான ஜூலியா மொர்லே,போட்டியின் முடிவை அறிவித்தார்.

**ரஷிய அழகிக்கு பட்டம்**

ரஷியாவின் செனியா சுகினோவா, போட்டியில் முதல் இடம்பிடித்து உலக அழகி பட்டத்தைத் தட்டிச் சென்றார்.

இந்திய அழகி பார்வதி ஓமன குட்டனுக்கு 2ஆவது இடமும், டிரினிடாட் ருபாகா நாட்டு அழகி கேப்ரியேல் வால்காட்டுக்கு 3ஆவது இடமும் கிடைத்தது.

ஏற்கனவே நடைபெற்ற உலக அழகி போட்டிகளில் இந்தியாவை சேர்ந்த ரீட்டா பாரியா (1966), ஐஸ்வர்யாராய்(1994), டயானா ஹைடன் (1997),யுக்தா முகி (1999), பிரியங்காசோப்ரா(2000) ஆகிய 5 அழகிகள் ,உலக அழகி பட்டம் வென்றுள்ளனர். அவர்கள் வரிசையில் உலக அழகி பட்டம் வெல்வார். என்று எதிர்பார்க்கப்பட்ட பார்வதி நூலிழையில் அந்த வாய்ப்பை தவறவிட்டு 2ஆவது இடம் பிடித்தார். (5)


சமுர்த்தி அலுவலர்

சதீஷ் -இற்கு நாளை 31ஆம் நாள்



(2004)

நவாலியூர்
அமரர்
செல்வராஜா சதீஸ்
(S.D.O) அவர்களின்
31 ஆம் நாள்
நாளை செவ்வாய்க்கிழமை
(16.12.2008)
காலை 10.00 மணிக்கு
இடம்பெறும்.
இவ் அறிவித்தலை
அனைவரும் ஏற்று
அன்னாரின் ஆத்ம சாந்திப்
பிரார்த்தனையிலும்
மதியபோசனத்திலும் கலந்து
கொள்ளுமாறு
அன்புடன்அழைக்கின்றோம்.
ரமேஷ்
சுரேஷ்
குடும்பத்தினர்

ஹேமா இல்லம்,
புலவர் வீதி, நவாலி வடக்கு.
T.P 0602212676


# "ஈழம்- நேற்றும் இன்றும்" புதிய தொடர் இன்றுமுதல் மக்கள் தொலைக்காட்சியில்

(சென்னை)

மக்கள் தொலைக்கட்சியில் ஒளிபரப்பாகும் புதிய தொடர் ஈழம்- நேற்றும் இன்றும் இலங்கைப் பிரச்சினை பற்றி பலரும் பல்வேறு கருத்துக்களைத் தெரிவித்து வருகிறார்கள்.

அவற்றுள் பல சுயநலத்தின் அடிப்படையில் வெளியிடப்பட்டவையே. இலங்கை அரசு தன் நாட்டில் வாழும் சொந்த மக்கள் மீதே மும்முனைத் தாக்குதல் நடத்தி வருவது உலகம் முழுவதும் வாழும் தமிழ் மக்களிடையே அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

இந்த இனவெறி வன்மம் எப்போது, எப்படி எங்கிருந்து தொடங்கியது என்பதை பார்வையாளர்களின் உள்ளத்தை உலுக்கும் வகையில் கூறுவதே ஈழம்- நேற்றும் இன்றும் தொடர்.

நீலவானம் ஊடக முற்றம் தயாரித்துள்ள இந்தத் தொடரை கவிதாபாரதி இயக்கியுள்ளார். இசை -மரியாமனோகர் பாடல்- பச்சியப்பன் ஒளிப்பதிவு -சீனு.

இந்தப் புதிய தொடர் இன்று திங்கட் கிழமை முதல் வெள்ளி வரை இரவு 8.30 மணிக்கு மக்கள் தொலைக்காட்சியில் ஒளி பரப்பாகவுள்ளது. (ஒ-5)

# வன்னியில் தொடரும் யுத்தம் காரணமாக கல்வி, சுகாதாரசேவைகள் பெரும்பாதிப்பு

## கிளிநொச்சி பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அறிக்கையில் தெரிவிப்பு

(கொழும்பு)

தற்போதைய யுத்தம் காரணமாக வன்னியில் மூன்றில் இரண்டு பங்கு மக்கள் தமது வீடுகளிலிருந்து இடம் பெயர்ந்துள்ளதுடன் அனைத்தையும் இழந்துள்ளனர் என கிளிநொச்சி மாவட்டத்திற்கான பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தின் நவம்பர் மாத இறுதியில் வெளியான அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சியில் இடம் பெயர்ந்தோர் தொற்று நோய்களுக்கு ஆளாகியுள்ளதுடன் அப் பகுதியில் மருந்துப் பொருட்களுக்கும் பெருந்தட்டுப்பாடு நிலவுவதாகவும் பாம்புக் கடியினால் மாத்திரம் 86 பேர் வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் 173 பாடசாலைகள் மூடப்பட்டுள்ளதாகவும் அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, கிளிநொச்சியில் 2 இலட்சத்து 17 ஆயிரத்து 903 மக்கள் உள்ளனர். இவர்களில் 44 ஆயிரத்து 893 பேர் இடம் பெயராமல் கிளிநொச்சியில் உள்ளவர்கள். 1இலட்சத்து 11 ஆயிரத்து 108 பேர் கிளிநொச்சிக்குள் இடம் பெயர்ந்துள்ளனர். 61ஆயிரத்து 902 பேர் முல்லைத்தீவு, மன்னார் மற்றும் வவுனியா மாவட்டங்களிலிருந்து இடம் பெயர்ந்தவர்கள்.

10 வைத்தியசாலைகள் இயங்குகின்றன. 6 வைத்திய சாலைகள் தற்காலிகமாக ஏனைய வைத்தியசாலைகளுடனும் பொதுச் சுகா தார நிலையங்களுடனும் இணைக்கப்பட்டுள்ளன.

கிளிநொச்சி மாவட்ட பொது வைத்திய சாலையின் ஒரு பகுதி விஸ்வமடுவில் இயங்குகிறது வெளிநோயாளர் பிரிவு கிளிநொச்சியில் செயற்படுகிறது.

கிளிநொச்சி, கண்டா வளை ,பூநகரி ஆகிய இடங்களில் 3 மருத்துவ சுகாதார அலுவலகங்கள் இயங்குகின்றன.

### போர் காரணமாக பொது மக்களுக்கு ஏற்பட்ட பாதிப்புக்கள்.

தற்போதைய யுத்தம் காரணமாக பொது மக்களுக்கு பாதிப்பு தொடர்கிறது.

மூன்றில் இரண்டு பங்கு வன்னி மக்கள் தமது வீடுகளிலிருந்து இடம் பெயர்துள்ளதுடன் அவர்கள் ஏறத்தாழ அனைத்தையும் இழந்துள்ளனர். 173 பாடசாலைகள் மூடப்பட்டுள்ளன. மாணவர்கள் தற்காலிக கூடாரங்களிலும் மரங்களின் கீழிருந்தும் கல்வி பயில்கின்றனர். 9 ஆயிரத்து 556 மாணவர்கள் பாடசாலைக்குச் சமுகமளிப்பதில்லை என வலயக் கல்விப் பணிப்பாளரின் அறிக்கை கூறுகிறது.

7 பிரதேச செயலாளர் அலுவலகங்கள் மூடப்பட்டுள்ளன. (மன்னாரில் 2 , முல்லைத் தீவில் 2, வவுனியா வடக்கில் 1 மற்றும் கிளிநொச்சியில் 2) நூற்றுக்கணக்கான நெல் வயல்களில் தற்போதைய யுத்தம் காரண மாக உற்பத்தி மேற்கொள்ளப்படவில்லை. பிரதி விவசாயப்பணிப்பாளரின் அறிக்கையின் படி அண்மையில் ஏற்பட்ட கிளிநொச்சி மாவட்டத்தில் ஏற்பட்ட வெள்ளம் காரணமாக 163.2 மில்லியன் ரூபா நஷ்டம் ஏற்பட்டுள்ளது. நூற்றுக்கணக்கானோர் தமது தொழில்களை இழந்துள்ளனர். பலர் உலர் உணவுப் பொருட்களிலேயே தங்கியிருக்கின்றனர்.

சந்தையில் அரிசி கிடைக்கிறது ஆனால் மரக்கறி மற்றும் கடல் உணவுப்பொருட் களுக்கு தட்டுப்பாடு உள் ளது. பொது போக்கு வரத்து மிகவும் மட்டுப் படுத்தப்பட்டுள்ளது. எரிபொருள் இன்மை, வீதிகளின் மோசமான நிலை ஆகியன இதற்கான காரணங்களாகும்.

### நீர் மற்றும் மலசலகூட வசதி

சுமார் 50 சதவீதமான பொதுமக்களுக்கு மலசலகூட வசதிகள் இல்லை. பொதுக் கிணறுகளில் சுகாதார ஊழியர்களால் குளோரின் தெளிக்கப்படுகிறது. உளவியல் பாதிப்புக் குள்ளானோர்,உடல் அங்கவீனமுற்றோர், முதியோர் இல்லங்கள் ,செவிப்புலன் மற்றும் விழிப் புலன் அற்ற சிறுவர்களுக்கான இல்லங்கள் போன்ற ஊன முற்றோருக்கான சேவைகள் வழங்கும் 10 நிறுவனங்கள் மிகவும் கடின மான சூழ் நிலையில் சேவையாற்றுகின்றன. பாதிக்கப்பட்டவர்களுக்கு தங்குமிட வசதிகள், மலசல கூட வசதிகள், போஷாக் குணவு மற்றும் அவர்களின் நாளாந்த வாழ்க்கைக்கான விசேட உபகரணங்கள் என்பன தேவைப்படுகின்றன.

### யுத்தத்தினால் பாதிப்புக்குள்ளானோர்

29.11.2008 இல் கல்லாறு பகுதியில் வான் வழி தாக்குதல் காரணமாக பொது மகன் ஒருவர் இரு கால்களையும் இழந்துள்ளார். வயதான பெண் ஒருவர் வலது கையை இழந்துள்ளதுடன் 5 வயது சிறுவன் ஒருவனின் உடல் இடுப்புக்கு கீழ் செயலிழந்துள்ளது. யுத்தம் காரணமாக அங்கவீனமான 2100 பேர் கிளிநொச்சியில் பதிவு செய்யப்பட்டுள்ளனர். அவர்களுக்கு செயற்கை கால்கள் மற்றும் நடப்பதற்கான விசேட உதவிகள் தேவைப்படுகின்றன. அங்கு உள்ளூரில் தயாரிக்கப்படும் சில பொருட்களை தவிர இத்தகைய பொருட் களை வழங்குவதற்கு வேறு நிறுவனங்கள் இல்லை.

### தொற்று மற்றும் தொற்றா நோய்கள்

2008 செப்டெம்பர் மாதத்திலிருந்து 44 பேர் மலேரியா நோய்க்குள்ளாகியிருப்பது இரத்தப் பரிசோதனை மூலம் கண்டறியப்பட் டுள்ளதுமழை காரணமாக பல இடங்களில் நீர் தேங்கியுள்ளதால் நுளம்பு ப் பெருக்கம் அதி கரிக்கிறது பூச்சி நாசினிகள் மற்றும் நுளம்பு வலைகள் (15,000) தேவைப்படுகின்றன. 2008 ஒக்டோபர் மாதத்தில் 63 வயிற் றோட்ட நோயாளர்கள் பதிவு செய்யப் பட்டுள்ளனர். சுகாதார கல்வி, குளோரின் பாவனை மற்றும் ஏனைய தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள் ளப்பட்டன.

### மருந்துப் பொருட்கள்

மருந்துகளின் ஒரு பகுதி வவுனியாவில் உள்ளது அவற்றுக்கு பாதுகாப்பு அமைச்சின் அனுமதி தேவைப்படுகிறது அனுமதிக்காக 2மாதங்களுக்கு முன் விண்ணப்பிக்கப்பட்டது. இது வரை பதில் இல்லை. 3 மாத காலத்திற்கும் மேலாக ஒட்சிசன் சிலிண்டர்கள் அனுமதிக்கப்படுவதில்லை. சில தீவிர நோயாளிகள் ஒட்சின் இல்லாமை காரணமாக உயிரிழந்துள்ளனர்.

2008 பெப்ரவரியிலிருந்து மலேரியா தடுப்புத் திட்டத்திற்கான பொருட்கள் அனு மதிக்கப்படவில்லை. பூச்சி நாசினிகள் , மலத்தியன் போன்றவை இவற்றில் அடங்குகின்றன. ஒட்சிசன் உட்பட மருந்துப் பொருட்களுக் கான அனுமதி தேவைப்படுகி றது.

### போஷாக்குத் திட்டங்கள்.

அனீமியா மற்றும் போஷாக்கு குறைபாடு நோயாளிகள் மத்தியில் பொதுவானதாகவுள்ளது குறிப்பாக 15 வீத கர்ப்பிணி தாய்மார் அனீமியாவினால் பாதிக்கப்பட்டுள்ளனர். இவர்களில் 5 சதவீதமானோர் கடும் பாதிப்புக்குள்ளாகியுள்ளனர்.

சுமார் 15 வீத ஆரம்பப் பாடசாலை சிறார்கள் கடுமையான போஷாக்கு குறை பாட்டினால் பாதிக்கப்பட்டுள்ளனர். இச் சிறார்களுக்கான போஷாக்குத் திட்டங்கள் தேவைப்படுகின்றன. கடந்த மூன்று மாதங்களாக (2008 செப்ரெம்பர், ஒக்டோபர், நவம்பர்) எரிபொருள் அனுமதிக்கப்படவில்லை. இதனால் நோயாளர் பராமரிப்பு சேவை உட்பட வைத்தியசாலையின் நடவடிக்கைகள் கடுமையாகப் பாதிக்கப்பட்டுளன. பல இடங்களில் அம்புலன்ஸ் சேவைகள் நிறுத்தப்பட்டுள்ளன. எரிபொருள் தேவைப்படுகிறது.

### போரினால் காயமுற்றோர்.

கடந்த நவம்பர் மாதம் 4 பொது மக்களின் இறந்த உடல்கள் தர்மபுரம் வைத்தியசாலைக்கு கொண்டு வரப்பட்டன காயங்களுக்கான 23 பொது மக்கள் அனுமதிக்கப்பட்டனர். பாம்புக் கடிக்குள்ளான 86 பேர் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (5)


யாழ்ப்பாணம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் -வ.து

நத்தார் புதுவருட பண்டிகைக் காலத்தை முன்னிட்டு விசேட விலைக்கழிவு





**01. கூட்டுறவு நகர் 1 127 ,கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.**

**02.கூட்டுறவு நகர் 2 373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.**

**01. கேக்:**

கேக் தயாரிப்பதற்கான சகல பொருட்களும் உள்ளடக்கப்பட்ட ரூபா.750/- பெறுமதியுடைய பொதி ஒன்று விசேட விலைக் கழிவுடன் ரூபா 690/-ற்கு விற்பனைக்கு விடப்பட்டுள்ளது.

500 கிராம் மாஜரின், 500 கிராம் மா, 500 கிராம் சீனி, 50 கிராம் பிளம்ஸ், 50 கிராம் கஜு, 50 கிராம் கலர் புருட்ஸ், முட்டை, பேக்கிங்பவுடர், ஒயில்பேப்பர், வனிலா, 50 கிராம் இஞ்சி அல்வா, 50 கிராம் பூசணி அல்வா, 50 கிராம் மிக்ஸ் புரூட்.

**02. காகிதாதி:**

கொள்வனவு செய்யும் காகிதாதி பொருட்களின் அளவுக்கேற்ப இரண்டு பேனா அல்லது பென்சில் இலவசமாக வழங்கப்படும்



| கொள்வனவு செய்யும் பொருள் | கொள்வனவு செய்யும் தொகை | இலவசமாக வழங்கப்படும் பொருள் |
|---|---|---|
| 80 பக்கம் அட்லஸ் கொப்பி | 12 | 02 பேனா இலவசம் |
| 120 பக்க அட்லஸ் கொப்பி | 6 | 02 பேனா இலவசம் |
| 160 பக்க அட்லஸ் கொப்பி | 5 | 02 பேனா இலவசம் |
| 200 பக்க அட்லஸ் கொப்பி | 4 | 02 பேனா இலவசம் |
| 240 பக்க அட்லஸ் கொப்பி | 4 | 02 பேனா இலவசம் |
| 320 பக்க அட்லஸ் கொப்பி | 4 | 02 பேனா இலவசம் |
| 400 பக்க அட்லஸ் கொப்பி | 3 | 02 பேனா இலவசம் |



| கொள்வனவு செய்யும் பொருள் | கொள்வனவு செய்யும் தொகை | இலவசமாக வழங்கப்படும் பொருள் |
|---|---|---|
| சீ.ஆர் கொப்பி 01 | 2 | 01 பேனா இலவசம் |
| சீ.ஆர் கொப்பி 02 | 3 | 02 பேனா இலவசம் |
| சீ.ஆர் கொப்பி 03 | 3 | 02 பேனா இலவசம் |
| சீ.ஆர் கொப்பி 04 | 2 | 02 பேனா இலவசம் |
| சீ.ஆர் கொப்பி 05 | 2 | 02 பேனா இலவசம் |
| இரட்டை றூள் | 6 | 02 பென்சில் இலவசம் |
| நாலு றூள் | 6 | 02 பென்சில் இலவசம் |



**03. பாதணிகள்:**

அதிரடி விலைக் கழிவில் விற்றுத்தீர்த்தல் முறையில் சகல பாதணிகளுக்கும் விசேட விலைக்கழிவு வழங்கப்பட்டுள்ளது.

**04. பரிசுப் பொருட்கள்**

பிறந்ததினம்,திருமண நிகழ்வுகள் மற்றும் கொண்டாட்டங்களின் போது வழங்கக் கூடிய பரிசுப் பொருட்கள் வகைகளும் விசேட விலைக்குறைப்புச் செய்யப்பட்டுள்ளது.

**05.இக்கால கட்டத்தில் கொக்கக்கோலா 1.5 லீற்றர் சோடா 05 கொள்வனவு செய்பவர்களுக்கு 01 கொக்கக்கோலா 1.5 லீற்றர் சோடா இலவசமாக வழங்கப்படும்.**

சோடா ஒன்றின் விலை ரூபா.140/-மட்டுமே.

06. மேற்படி காகிதாதி பொருட்கள் கொள்வனவு செய்யும் பாவனையாளர்கள் அதற்குரிய சிட்டையை பாதுகாப்பாக வைத்திருப்பதன் மூலம் 2009 ஜனவரி மாதத்தில் நடைபெறும் பரிசு குலுக்களில் தாங்களும் அதிஷ்டசாலியாக முடியும்.

மேற்படி விலைக் கழிவு விற்பனையில் தாங்களும் பங்கேற்று நத்தார் புதுவருடப்பண்டிகையைச் சிறப்பாக கொண்டாடுமாறு எமது அன்பார்ந்த வாடிக்கையாளர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

(சீ/1843)

வாடிக்கையாளர்கள் அனைவருக்கும்

எமது நத்தார் புதுவருட நல்வாழ்த்துக்களை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கின்றோம்.

முட்டாள்தனத்தை மூலதனமாகக் கொண்டு – செயல்படும் எந்தக் காரியமும் வெற்றியை ஈட்டித் தராது.

~ பெல்ஜியம்

வலம்புரி

## அமைச்சர் திஸ்ஸ விதாரணவின் கருத்துப்படி இனப்பிரச்சினை தீரப்போகிறதா?

இனப்பிரச்சினைத் தீர்வுக்கான அனைத்துக் கட்சிக்குழு தீர்வு விடயத்தில் இணக்கப்பாட்டிற்கு வந்துள்ளதாக அனைத்துக் கட்சிக் குழுவின் தலைவர் பேராசிரியர் திஸ்ஸ விதாரண தெரிவித்துள்ளார்.

மத்திய மற்றும் மாகாண ஆட்சிகளுக்கிடையிலான அதிகாரப் பரவலாக்கங்கள் தொடர்பான இணக்கப்பாட்டிற்கு அனைத்துக் கட்சிக்குழு இணங்கியிருப்பதன் மூலம் இனப்பிரச்சினைக்குத் தீர்வு கிடைத்துள்ளதாக அவர் கூறியுள்ளார்.

அவரின் கருத்துப்படி அடுத்துவரும் சில மாதங்களில் இனப்பிரச்சினை முற்றுப்பெறும் என்பதாகும்.

அவ்வாறாயின் வன்னியில் இடம்பெறும் போர் நிறுத்தப்படவேண்டுமல்லவா? யுத்தத்தை நிறுத்தாத எதுவுமே இனப்பிரச்சினைக்கான தீர்வாகாது என்பது சாமானிய மக்களுக்கும் தெரிந்தவிடயம்.

இதனைப் பேராசிரியர் திஸ்ஸ விதாரண தெரியாமல் இருப்பாரா என்ன? இனப்பிரச்சினைக்குத் தீர்வாக எதனையாவது முன்வைக்க வேண்டிய தேவை அரசிற்குள்ளது.

அதிலும் இந்திய மத்திய அமைச்சர் பிரணாப் முகர்ஜி இலங்கைக்கு வருவதற்கு முன்னதாக இனப்பிரச்சினைக்குத் தீர்வு முன்வைக்கப்பட வேண்டும் என்பதில் அரசு தீவிரமாக ஈடுபட்டுள்ளது.

அமைச்சர் பிரணாப் முகர்ஜி இலங்கைக்கு வரும்போது யுத்த நிறுத்தத்தை செய்யுமாறு வலியுறுத்துவார். அதற்கு இலங்கை அரசு பதிலளித்தாகவேண்டும்.

இனப்பிரச்சினைக்கு விரைவில் தீர்வு கண்டு விடுவோம் அதற்கான முயற்சியில் ஈடுபட்டுள்ளோம் என்றெல்லாம் இந்தியாவிடம் கூறினால் இதைத்தானே கடந்த முப்பது ஆண்டுகளாக சொல்லிக் கொண்டிருக்கிறீர்கள் என்று அந்த நாடு கேட்கும்.

எனவே அத்தகையதோர் கேள்விக்கு இடமளிக்காமல் இனப்பிரச்சினைக்கான தீர்வுத்திட்டம் தயார், அதற்கு சர்வகட்சிக்குழு சம்மதம் தெரிவித்துள்ளது என்று கூறி நிலைமையை சமாளிக்க அரசு முனைந்துள்ளது.

இதன் காரணமாகவே இனப்பிரச்சினைக்கான தீர்வுத்திட்டத்தில் சர்வகட்சிக்குழு இணக்கம் கண்டுள்ளதாக பேராசிரியர் திஸ்ஸ விதாரண அவசர அவசரமாக அறிக்கை விட்டுள்ளார்.

இதுதான் இனப்பிரச்சினைக்கான தீர்வென்றால் அதனை எப்பவோ அடைந்திருக்க முடியும்.

இனப்பிரச்சினைக்கான தீர்வுவென்பது தனித்து பெரும்பான்மை சார்ந்தவர்கள் சேர்ந்து எடுக்கும் முடிபல்ல. அது தமிழ் மக்களுடன் சம்பந்தப்பட்ட பிரச்சினை.

தமிழ் மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளை தீர்ப்பதாக –அவர்கள் இந்த நாட்டின் சமத்துவ அதிகாரமுடையவர்களாக வாழ்வதற்கான சூழமைவை ஏற்படுத்துவதாக தீர்வு இருக்க வேண்டும்.

இதைவிடுத்து இனப்பிரச்சினைக்குத் தீர்வு அடையப்பட்டுவிட்டது. ஆனால் யுத்தமும் ஓயவில்லை, உயர் பாதுகாப்பு வலயங்களும் அகலவில்லை என்றால், நிலைமை எப்படி என்பதை ஊகிப்பதில் அதிக சிரமம் இருக்க முடியாது.

## விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டிலிருந்து வவுனியாவுக்கு உறவினரிடம் வந்தோரை விருப்பத்திற்கு மாறாக நலன்புரி நிலையங்களில் தங்க வைப்பதாக விசனம்

(கொழும்பு)

வன்னியில் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளிலிருந்து இடம்பெயர்ந்து வந்துள்ள மக்களை அவர்களின் விருப்பத்திற்கு மாறாக நலன்புரி நிலையங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளதாக வவுனியாத் தகவல்கள் தெரிவித்தன.

வவுனியாவின் பல்வேறு பகுதிகளில் உள்ள தத்தமது உறவினர்களிடம் செல்வதற்காகவே வன்னியில் இருந்து நூற்றுக் கணக்கான குடும்பங்கள் வந்துள்ளதாகவும் ஆனால் அவர்களை உறவினர்களிடம் செல்லவிடாது ஓமந்தைச் சோதனைச் சாவடியிலிருந்து நேரடியாக மதவாச்சி–மன்னார் வீதியில் உள்ள செட்டிக்குளம் மனிக் பாம் நலன்புரி நிலையங்களுக்கு கொண்டு சென்றுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவ்வாறு நலன்புரி நிலையங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளவர்களை சில உறவினர்கள் சென்று பார்வையிட்டும் வந்துள்ளனர். நலன்புரி நிலையங்களில் பெரும் சிரமத்திற்கு மத்தியில் இளம் பெண்கள், சிறுவர்கள் முதியவர்கள் மற்றும் இளைஞர்கள் தங்கியுள்ளனர்.

இவர்கள் அனைவரும் ஒரே மண்டபத்தில் தங்க வைக்கப்பட்டுள்ளதாகவும் அத்தியாவசிய வசதிகள் எதுவும் இன்றி பெரிதும் கஷ்டப்படுவதாகவும் உறவினர்கள் தெரிவித்துள்ளன.

இந்த மக்கள் உறவினர்களிடம் செல்வ தற்காக வந்துள்ள போதிலும் அவர்களை செட்டிக்குளம் மனிக் பாமில் 80 ஏக்கர் காணியில் தற்காலிக வீடுகளை அமைத்துக் குடியமர்த்துவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துவருவதாக வவுனியா அரசாங்க அதிபர் அலுவலக வட்டாரங்கள் தெரிவித்தன.

ஆனால்,இந்த மக்கள் தம்மை உறவினர் களிடம் சென்று வாழ்வதற்கு இடமளிக்க வேண்டும் என வேண்டுகோள் விடுத்து வருவதாக வவுனியாவில் உள்ள அவர்களின் உறவினர்கள் தெரிவிக்கின்றனர்.

தம்மைச் சுயமாகத் தொழில்புரிந்து வாழ்வதற்கு இடமளிக்குமாறு இடம்பெயர்ந்த மக்கள் கேட்டுக்கொண்டுள்ள அதே நேரம் வன்னியில் இருந்து இடம்பெயர்ந்து வந்துள்ளவர்களைத் தம்மிடம் அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என அவர்களின் உறவினர்கள் அரசாங்கத்திடம் கோரிக்கை விடுப்பதாகவும் தெரிவித்தனர். இது தொடர்பில் தமிழ் அரசியல்வாதிகள் கவனம் செலுத்தி நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அவர்கள் தெரிவித்தனர்.வன்னியில் விடுதலைப் புலிகளின் கட்டுப் பாட்டுப்பகுதிகளில் இருந்து இதுவரை சுமார் 600 பேர் வவுனியா அரச கட்டுப்பாட்டுப் பகுதிக்கு வந்துள்ளதாக அரசதரப்புத் தகவல்கள் தெரிவித்துள்ளன. (5)

## ஏப்ரலுக்கு முன்னர் பொதுத்தேர்தல் நடத்தினால் ஜே.வி.பியை பாதிக்கும்

### ஜனாதிபதி மஹிந்த சொல்கிறார்



(கொழும்பு)

2009ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்திற்கு முன்னர் நாடாளுமன்றம் கலைக்கப்பட மாட்டாது என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஆளும் கட்சியின் நாடாளுமன்றக் குழுவிற்கு தெரிவித்திருப்பதாக சிங்கள வாரப் பத்திரிகை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச் சந்தர்ப்பத்தில் பொதுத்தேர்தல் ஒன்றிற்கு செல்வது அவசியமற்றது எனவும் ஏப்ரல் மாதமளவில் அதற்கு தயாராகுமாறும் ஜனாதிபதி அறிவித்துள்ளார்.

ஏப்ரல் மாதத்திற்கு முன்னர் நாடாளு மன்றத்தைக் கலைத்து விடும் பட்சத்தில் தன்னை ஆட்சியில் அமர்த்துவதற்கு ஒத்துழைப்பு வழங்கிய மக்கள் விடுதலை முன்னணிக்கு பாதிப்பு ஏற்படும்.

ஐந்து வருடத்தை பூர்த்தி செய்யாத நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஓய்வூதியப் பணம் பெற்றுக்கொள்வதில் பாதிக்கப்படலாம் என ஜனாதிபதி சுட்டிக்காட்டியுள்ளார் என தெரிவிக்கப்படுகிறது. (5)

## புலிகள் ஆயுதங்களை கையளித்தாலும் போர் நிறுத்தம் செய்ய வேண்டியதில்லை

### ஜே.வி.பி. எம்.பி.லால் காந் சொல்கிறார்

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளுடன் போர்நிறுத்தம் செய்தால் அரசாங்கம் கவிழ்க்கப்படும் என ஜே.வி.பி. நாடாளுமன்ற உறுப்பினர் லால் காந் கூறியுள்ளார்.

காலியில் நடைபெற்ற கட்சிக் கூட்டமொன்றில் அவர் உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் உரையாற்றுகையில்,

அரசாங்கம் போர் நிறுத்தம் செய்தால் பொது மக்களையும் முப்படையினரையும் வீதியிலிறக்கி அரசாங்கத்தை கவிழ்ப்போம்.


புலிகள் ஆயுதங்களைக் கையளித்தாலும் இல்லாவிட்டாலும் கூட போர்நிறுத்தம் செய்ய வேண்டியதில்லை.

பிரபாகரன் பதுங்கியிருக்கும் கடைசி பதுங்குக் குழி அவரின் புதைகுழியாகும் வரை போர் நிறுத்தம் அவசிய மில்லை.

யுத்தத்திற்கு ஆசீர்வாதம் வழங்கும் நிலைக்கு நாட்டை கொண்டு வந்தவர்கள் ஜே.வி.பி.யே மக்களை சரியான இடத்திற்கு ஜே.வி.பி. வழி நடத்தும். இது ஜே.வி.பியின் இலக்கு.

ஜே. வி.பி சொல்வதை இன்று கேட்காத வர்கள் நாளை கேட்பார்கள் நாட்டின் வளங்களை விற்பவர்கள், மக்கள் சொத்துக்களை கொள்ளையடிப்பவர்கள் தேசாபிமானிகளாக இருக்க முடியாது என்றார். (5)

## சுவாமி விவேகானந்தரின் ஆளுமை வளர்ச்சி அன்பே பலனைத் தரும்



அன்பு, நேர்மை, பொறுமை–இவை மூன்றும் இருந்தால் போதும், வேறு எதுவும் தேவையில்லை. வளர்ச்சி, அதாவது விரிந்து பெருகுதல் ,அதாவது அன்பு – இதைத் தவிர வாழ்க்கை என்பது வேறு என்ன? எனவே எல்லா அன்பும் வாழ்வு. அன்பே வாழ்வின் ஒரே நியதி. எல்லா சுய நலமும் மரணமே – இந்த உலகமோ ,அல்லது மறு உலகமோஇது உண்மை. நன்மை செய்வது வாழ்வு. பிறருக்கு நன்மை செய்யாமல் இருப்பது சாவு.நமது பார்வைக்குத் தென்படுகின்ற மனிதமிருகங்களுள் நூற்றுக்குத் தொண்ணூறு பேர் இறந்தவர்கள்,வெறும் பிணங்கள். ஏனெனில் என்இளைஞர்களே, அன்புடையவனைத் தவிர பிறர்வாழ்பவர்கள்அல்ல.

என் குழந்தைகளே, உணர்ச்சி கொள்ளுங்கள், உணர்ச்சிகொள்ளுங்கள்.. ஏழைகளுக்காக , பாமரர்களுக்காக ,ஒதுக்கப்பட்டவர்களுக்காக உணர்ச்சி கொள்ளுங்கள். உணர்ச்சியில் ஆழ்ந்து செல்லுங்கள். இதயமே நின்று, மூளை குழம்பி உங்களுக்குப் பைத்தியமே பிடித்து விடும் எனத் தோன்றும் வரையிலும் உணர்ச்சியில் மூழ்குங்கள். பிறகு இறைவனின் திருவடிகளில் உங்கள் அந்தராத்மாவைச் சமர்ப்பியுங்கள்.

அப்போது ஆற்றல் வரும், உதவிவரும், குறையாத ஊக்கம் வரும்... என் குழந்தைகளே, பயம் வேண்டாம். நட் சத்திரங்கள் மின்னுகின்ற அந்தப் பரந்த வானம் இடிந்து வீழ் ந்து உங்களை நசுக்கிவிடுமோ என்று பயத்துடன் அண்ணாந்து பார்த்துக் கொண்டு நிற்காதீர்கள். கொஞ்சம் பொறுங்கள் இன்னும் சில மணித்துளிகள் தான், அந்த வானம் உங்கள்காலடியில் கிடக்கும் . பொறுங்கள்; பணத்தால் பயனில்லை, பெயரால் பயனில்லை, புகழால் பயனில்லை, கல்வியால் பயனில்லை, அன்பு ஒன்றே ப யன் தருவது; துளைக்க முடியாத சுவர்களையெல்லாம் துளைத்து முன்னேறக் கூடியது ஒழுக்கம் ஒன்று தான்.

# ஊழிக்காலப் பேரழிவை உணர்த்தும் கடும் மழை—பெரும் புயல் 'நிஷா'

09

## வங்கிகளுக்குள் நுழைந்த வெள்ளம் பணத்தை கரைத்துக் குடிக்க முற்பட்டது

**தீவிரமாகச் செயற்படும் காப்புறுதி நிறுவனங்கள்**

யாழ்ப்பாணத்து நிதியைத்திரட்டி தென்னிலங்கைக்கு அனுப்புவதில் காப்புறுதி நிறுவனங்கள் முனைப்




புக்கொண்டுள்ளன என்ற குற்றச் சாட்டுக்கள் யாழ்ப்பாண மக்களிடையே எழுந்ததுண்டு.

அதேநேரம் காப்புறுதியை ஏற்படுத்திக் கொடுப்பதில் அது சார்ந்த நிறுவனங்கள் காட்டும் தீவிரம் இழப்பீட்டுத்தொகையை வழங்குவதில் காட்டுவதில்லை என்ற பேச்சுக்களும் பரவலாக அடிபட்டதுண்டு. இவற்றின் மத்தியிலும் யாழ்ப்பாண வர்த்தகர்கள் பொருட்களை கப்பலில் ஏற்றியது முதல் அவற்றை விற்றுத்தீர்க்கும் வரையில் பாதுகாப்புக் கருதி காப்புறுதி செய்ய வேண்டிய கட்டாயத்தில் இருந்தனர்.



இதனால் தென்னிலங்கையில் இயங்கிய காப்புறுதி நிறுவனங்கள் பல யாழ்ப்பாணத்தில் தமது முயற்சியை ஆரம்பித்தன. அதற்கான பலாபலன்களையும் அவை ஈட்டிக்கொண்டன. காப்புறுதி நிறுவனங்களின் வருமானத்தில் யாழ்ப்பாணத்தின் பங்கு கணிசமான தென்பதைப் புள்ளிவிபரங்கள் தெளிவுபடுத்துகின்றன.

**காப்புறுதி நிறுவனங்களுக்கு நிஷாவின் சோதனை**

யாழ்ப்பாணத்தில் கணிசமான பொலிசிகளை ஏற்படுத்திய காப்புறுதி நிறுவனங்கள் நட்ட ஈடு வழங்குவது தொடர்பில் அதிக மான எதிர்பார்ப்பை கொண்டிருக்க மாட்டாதென்றே கூறவேண்டும். யாழ்ப்பாணத்திற்கு கப்பல் மூலம் பொருட்களை ஏற்றி வரும் வர்த்தகர்கள் தாராளமாக காப்புறுதி செய்திருந்தனர்.

ஒவ்வொரு தடவையும் கப்பலில் வரும் கோடிக்கணக்கான ரூபாய்களுக்கு காப்புறுதி செய்வது வழமை எனினும், கப்பல் பாதுகாப்பாக வந்து சேர்ந்து பொருட்கள் இறக்கப்பட்டுவிட்டால் காப்புறுதி தொகை முழுவதும் காப்புறுதி நிறுவனங்களுக்கு ஆதாயமாகி விடும்.

அதேநேரம் கப்பல் தாக்கப்படும் சந்தர்ப்பத்தில் கப்பல் முற்றாக சேதமடைந்தால் மட்டுமே இழப்பீட்டுத் தொகை வழங்கப்படும்.

கடந்த ஒக்டோபர் மாதம் காங்கேசன் துறையில் நடந்த சம்பவத்தில் கப்பல் முற்றாக சேத மடையவில்லை என அரசு அறி வித்தது. இந்த அறிவிப்போடு பொருட்களை இழந்தவர்கள் இழப்பீட்டுத் தொகையை பெற முடியாமல் போயிற்று.

இது ஒரு சிலருடன் சம்பந்தப்பட்டமையால் அது பற்றி எவரும் அதிகம் அலட்டிக்கொள்ளவில்லை.

ஆனால் 'நிஷா' புயல், வெள்ளம் அது போன்றதல்ல. இதற்கான இழப்பீட்டுத்தொகையை வழங்க வேண்டிய கட்டாயம் யாழ்ப்பாணத்தில் உள்ள காப்புறுதி நிறுவனங்களுக்கு உண்டு.

அதாவது, யாழ்ப்பாணத்தில் இயங்கும் காப்புறுதி நிறுவனங்களுக்கு 'நிஷா' சோதனை நடத்து கிறது.

இழப்பீட்டுத்தொகை வழங்கப்பட்ட நிகழ்வைச் சித்தரிக்கும் புகைப்படங்கள் போட்டி போட்டுக் கொண்டு பத்திரிகைகளில் வருகின்றன.

ஒரு இலட்சம், இரண்டு இலட்சத்திற்கு இத்துணை எடுப்பு என்றால், எங்கே பார்ப்போம் என்னால் ஏற்பட்ட இழப்பிற்கு காப்புறுதி நிறுவனங்கள் இழப்பீட்டுத் தொகையை வழங்குகின்றனவா? என்று 'நிஷா' பரீட்சிக்கிறது.

இலாபத்தோடு இருக்கலாம் என்று நினைத்த காப்புறுதி நிறு

**என்.விஜயன்**


வனங்களுக்கு 'நிஷா' வெள்ளம் பேரதிர்ச்சியைக் கொடுத்திருக்கும். இருந்தும் தமது வாடிக்கையாளர்களின் நலன்கள் கவனிக்கப்பட்டு இழப்பீட்டுத் தொகையை வழங்காவிட்டால் யாழ்ப்பாணத்தில் இருந்து சில காப்புறுதி நிறுவனங்களை வெளியேற்றிய பெருமையையும், 'நிஷா' பெற்றுக் கொள்ளும்.

எனவே, 5ஆம் தரப்புலமைப் பரீட்சை போல'நிஷா'நடத்திய பரீட்சையில் வெற்றியடைந்து தமது இருப்பை உறுதி செய்யும் கட்டாயம் காப்புறுதி நிறுவனங்களுக்கு உண்டு.

**வெள்ளக் களத்தில் காப்புறுதி நிறுவனங்கள்**

எங்கும் வெள்ளம், எதிலும் வெள்ளம் என்ற இக்கட்டான சூழ்நிலையிலும் காப்புறுதி நிறுவனங்கள் இழப்பீடுகளை பார்ப்பதிலும் உடனடியாக நட்ட ஈட்டுத் தொகையைப் பரிந்துரை செய்வதிலும் காட்டிய ஆர்வம் எம்மவர் காப்புறுதி நிறுவனங்களில் பணியாற்றுவதால் ஏற்பட்டதெனத் துணிந்து கூறலாம்.

சில காப்புறுதி நிறுவனங்களின் பிரதிநிதிகள் உடனடியாகக் கொழும்பில் இருந்து யாழ்ப்பாணத்திற்கு




வருகை தந்து நிலைமையை நேரில் பார்த்தனர்.

இவையெல்லாம் யாழ்ப்பாணத்தவர்கள் காப்புறுதி நிறுவனங்களில் செயற்றிறனுடன் பணியாற்றியதால், வெள்ளத்தால் ஏற்பட்ட அழிவுக்கு உடனடியாக இழப்பீட்டுத் தொகை வழங்க வேண்டும் என உணர்வு பூர்வமாக வலியுறுத்தியதால் நடந்த நன்மைகளே.

**வங்கிகளில் வெள்ளம்**

திக்கு விஜயம் செய்து திரவியப் பொருட்கள், ஆடை ஆபரணங்களைப் பெற்றுக்கொண்ட வெள்ளம் வங்கிகளுக்கு விஜயம் செய்யாமல் விடுமா என்ன? யாழ்ப்பாண நகரமையத்தில் உள்ள அத்தனை வங்கிகளுக்கும் விஜயம் செய்தது. பெட்டிகளில் வைத்திருக்கும் பணத்தை எப்படியாவது கரைத்துக்குடித்து தன் ஆத்மாவை சாந்துப்படுத்த வெள்ளம் படாதபாடுபட்டது. *(வளரும்)*

# இந்திய அணிக்கு வெற்றி பிரகாசம்



(சென்னை)

சேவாக்-காம்பீரின் சிறப்பான ஆரம்ப அதிரடித் துடுப்பாட்டத்தின் மூலம் இந்திய அணி 387 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்கை நோக்கி வேகமாக முன்னேறுகிறது.

முன்னதாக தனது இரண்டாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி 9விக்கெட்டுக்களையிழந்து 311 ஓட்டங்களை எடுத்து ஆட்டத்தை இடை நிறுத்தியது.

இந்தியாவுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இங்கிலாந்து அணி 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் போட்டியில் விளையாடுகின்றது.

இதில் முதலாவது டெஸ்ட் கடந்த 11ஆம் திகதி சென்னை சேப்பாக்கம் மைதானத்தில் ஆரம்பமானது.

இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுபெடுத்தாடிய இங்கிலாந்து அணி அதன் முதலாவது இன்னிங்ஸில் சகல விக்கெட்டுக்களையு மிழந்து 316 ஓட்டங்களை எடுத்தது. இதில் ஸ்ரொரஸ் 123 ஓட்டங்களையும் பிறிர் 52,குக் 53 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் ஹர்பஜன் சிங்,மிஷ்ரா ஆகியோர் தலா 3 விக்கெட்டுக்களையும் சகீர் கான் 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு தனது முதலாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி சகல விக்கெட்டுக்களையுமிழந்து 241 ஓட்டங்களை மாத்திரமெடுத்தது.

இதில் அணித்தலைவர் தோனி 53 ஓட்டங்களையும் ஹர்பஜன் சிங் 40,டெண்டுல்கர் 37 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் பிளின்டொப்,பனீசர் ஆகியோர் தலா 3 விக்கெட்டுக்களையும் ஸ்வான் 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.



தொடர்ந்து தனது இரண்டாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி நேற்றுமுன்தினம் மூன்றாம் நாள் ஆட்டநேர முடிவில் 3 விக்கெட்டுக்களையிழந்து 172 ஓட்டங்களை எடுத்திருந்தது.

இந் நிலையில் நான்காம் நாளான நேற்று தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணிக்கு ஸ்ரொரஸ்-கொலிங்வூட் ஜோடி பலமான இணைப்பாட்டத்தை வழங்கியது.

இந்த ஜோடியில் ஸ்ரொரஸ் சதம் பெற தொடர்ந்து கொலிங்வூட்டும் தனது சதத்தை பூர்த்தி செய்து அசத்தினார். இருவரின் சதத்தின் உதவியுடன் இங்கிலாந்து அணி 250 ஓட்டங்களைக் கடந்தது.

எனினும் இந்த ஜோடி 4ஆவது விக்கெட்டுக்காக 214 ஓட்டங்களை இணைப்பாட்டமாக எடுத்தபோது ஸ்ரொரஸ் 108 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

அடுத்து களமிறங்கிய பிளின்டொப் 4 ஓட்டங்களை மாத்திரமெடுத்த நிலையில் ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து பிறிர் களமிறங்க மறுமுனையில் கொலிங்வூட் 108 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். அடுத்து களமிறங்கிய ஸ்வான் 7, ஹார்மிசன் ஒரு ஓட்டத்துடனும் அடுத்தடுத்து ஆட்டமிழந்தனர்.

மறுமுனையில் சிறப்பாக ஆடிய பிறிர் நிதானமாக ஆடி நம்பிக்கை அளித்தார். எனினும் பிறிரும் 33 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க இங்கிலாந்து அணி 9விக்கெட்டுக்களையிழந்து 311 ஓட்டங்களை எடுத்து ஆட்டத்தை இடைநிறுத்தி இந்திய அணிக்கு வெற்றி இலக்காக 387 ஓட்டங்களை நிர்ணயித்தது.

இதில் அன்டர்சன் ஆட்டமிழக்காமல் ஒரு ஓட்டத்தை எடுத்திருந்தார். பந்து வீச்சில் சகீர் கான்,இஷாந்த் சர்மா ஆகியோர் தலா 3 விக்கெட்டுக்களையும் மிஷ்ரா,யுவராஜ் சிங் மற்றும் ஹர்பஜன் சிங் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

தொடர்ந்து 387 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் இரண்டாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாட களமிறங்கிய இந்திய அணிக்கு ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களான சேவாக்-காம்பீர் ஜோடி சிறப்பான அதிரடி ஆரம்பத்தை வழங்கினர்.

இதில் சேவாக் 32 பந்துகளில் அரைச் சதம் கடந்து அசத்தினார். இந்த ஜோடியின் சிறப்பான ஆட்டத்தால் இந்திய அணி 18 ஓவர்களில் 100 ஓட்டங்களைக் கடந்தது.

எனினும் இந்த ஜோடி முதலாவது விக்கெட்டுக்காக 117 ஓட்டங்களை இணைப்பாட்டமாக எடுத்தபோது சேவாக் 68 பந்துகளில் (11 பவுண்டரிகள்,4சிக்சர்கள் அடங்கலாக) 83 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்தார்.



அடுத்து களமிறங்கிய டிராவிட் தனது வழமையான நிதானத்துடன் துடுப்பெடுத்தாட மறுமுனையில் காம்பீர் சிறப்பாக துடுப்பெடுத்தாடி நம்பிக்கையளித்தார்.

இந்நிலையில் நேற்றைய நான்காம் நாள் ஆட்ட நேர முடிவில் இந்திய அணி அதன் இரண்டாவது இன்னிங்ஸில் ஒரு விக்கெட்டை மாத்திரமிழந்து 131 ஓட்டங்களை எடுத்திருந்தது.

இதில் காம்பீர் 41 ஓட்டங்களுடனும் டிராவிட் 2 ஓட்டத்துடனும் ஆட்டமிழக்காமால் களத்தில் இருந்தனர். பந்து வீச்சில் ஸ்வான் ஒரு விக்கெட்டை வீழ்த்தினார்.

இறுதியும் 5ஆவது நாளுமான இன்று இந்திய அணி வெற்றிபெற வேண்டுமாயின் 9 விக்கெட்டுகள் கைவசமுள்ள நிலையில் 256 ஓட்டங்களை எடுக்கவேண்டும்.

## இரண்டு இன்னிங்சிலும் சதம் ஸ்ரொரஸ் புதிய சாதனை

சென்னை டெஸ்டில் இரண்டு இன்னிங்சிலும் சதம் அடித்து இங்கிலாந்து ஆரம்ப துடுப்பாட்ட வீரர் ஸ்ரொரஸ் சாதனை படைத்தார். முதல் இன்னிங்சில் 123 ஓட்டங்கள் எடுத்த ஸ்ரொரஸ் 2ஆவது இன்னிங்சில் 108 ஓட்டங்களைப்பெற்றார்.

சர்வதேச ரீதியில் 2 இன்னிங்சிலும் சதம் அடிக்கப்பட்டது. இது 64 ஆவது முறையாகும். இதில் ஸ்ரொரஸ் 10ஆவது இங்கிலாந்து வீரர் ஆவார். சுட்லிப் என்பவர் இரண்டு முறை இதே மாதிரி இரண்டு இன்னிங்சிலும் சதம் அடித்துள்ளார்.

இரண்டு இன்னிங்சிலும் சதம் அடித்த இங்கிலாந்து வீரர்கள் வருமாறு,

ரஸ்சல் (140,111 )(தென்னாபிரிக்கா-1923),சுட்லிப் (176,127) (அவுஸ்திரேலியா 1925), ஹேமண்ட் (119,177) (அவுஸ்திரேலியா 1929), சுட்லிப் (104,109)-(தென்னாபிரிக்கா 1929),பைந்தர் (117, 100) (தென்னாபிரிக்கா 1938), காம்டன் (147,103)-(அவுஸ்திரேலியா 1947),கிரகாம்கூச் (333,123) -(இந்தியா 1990), ஸ்டுவேர்ட் (118,143) (மேற்கிந்தியதீவுகள் 1994), வோகன் (103, 101) (மேற்கிந்திய தீவுகள் 2004), டிரெஸ்கோதிக் (105,107) (மேற்கிந்தியதீவுகள் 2004), ஸ்ரொரஸ் (123, 100) (இந்தியா 2008),

இந்திய வீரர்களின் காவஸ்கர் (3முறை) டிராவிட் (2முறை) விஜய் ஹாசரே ஆகியோர் இரண்டு இன்னிங்சிலும் சதம் அடித்துள்ளனர்.

(5)

## நியூசிலாந்து -மேற்கிந்திய தீவுகள் முதல் டெஸ்ட் சமனிலையை நோக்கி



ரெய்லர் அதிரடிச் சதம், சந்தர்போல் நிதானமான அரைச்சதம் பெற மேற்கிந்திய தீவுகள் அணி அதன் முதலாவது இன்னிங்ஸில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 340 ஓட்டங்களை எடுத்தது.

பதிலுக்கு தனது இரண்டாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடும் நியூசிலாந்து அணி நேற்றைய நான்காம் நாள் ஆட்டநேர முடிவில் 2 விக்கெட்டுக்களையிழந்து 44 ஓட்டங்களை எடுத்திருந்தது.

நியூசிலாந்திற்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள மேற்கிந்திய தீவுகள் அணி 2 டெஸ்ட், 2 இருபது -20 மற்றும் 5 ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடுகின்றது.

இதில் முதலாவது டெஸ்ட் கடந்த 11ஆம் திகதி டியூனிடினில் ஆரம்பமானது.

இப்போட்டியில் நாணய சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்து ஆடிய நியூசிலாந்து அணி அதன்முதலா வது இன்னிங்ஸில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 365 ஓட்டங்களை எடுத்தது.

இதில் பிளைன் 95 ஓட்டங்களையும் ரைடர் 89 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்து வீச்சில் பவல்,எட்வோட்ஸ் மற்றும் ஹயில் ஆகியோர் தலா 3 விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

பதிலுக்கு தனது முதலாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்திய தீவுகள் அணி சந்தர்போல்-ரெய்லரின் சிறப்பான இணைப்பாட்டத்தின் மூலம் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 340 ஓட்டங்களை எடுத்தது.

இதில் ரெய்லர் 107 பந்துகளில் (17பவுண்ரிகள் 3 சிக்சர்கள் அடங்கலாக) 106 ஓட்டங்களையும் சந்தர்போல் 76, அணித் தலைவர் ஹயில் 74 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் அணித்தலைவர் பானியல் விக்டோரி 6 விக்கெட்டுக்களையும் மில்ஸ் 3 விக்கெட்டுக்களையும் வீழ்ந்தினர்.

தொடர்ந்து முதலாவது இன்னிங்சில் 25 ஓட்டங்கள் வித்தியாசத்தில் முன்னிலை பெற்ற நியூசிலாந்து அணி தனது இரண்டாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடி நேற்றைய 4ஆம் நாள் ஆட்டநேர முடிபில் 2 விக்கெட்டுக்களை இழந்து 44 ஓட்டங்களை எடுத்திருந்தது.

இதில் மக்லன்ரோஸ் 24,பிளைன்4 ஓட்டங்களுடனும் ஆட்டம் இழக்காமல் களத்தில் இருந்தனர். பந்துவீச்சில் பவல் 2 விக்கெட்டுக் களைச் சாய்த்தார்.

போட்டியின் இரண்டாம் நாள் மழை காரணமாக ரத்துச் செய்யப்பட்ட நிலையில் இறுதி நாளான இன்று இரு அணிகளும் துடுப்பெடுத்தாடவேண்டிய நிலையில். ஆட்டம் சம நிலையில் முடியும் என எதிர்பார்க்கப்படுகிறது.

(5)

## 100 மீ. நீச்சலில் புதிய உலக சாதனை



குரேஷியாவில் நடைபெற்று வரும் ஐரோப்பிய நீச்சல் போட்டித் தொடரில் 100 மீ. ஆடவர் நீச்சல் பிரிவில் பிரான்ஸ் வீரர் அமௌரி லெவோ புதிய உலக சாதனை படைத்துள்ளார்.

இவர் 45.12 வினாடிகளில் இலக்கைக் கடந்து புதிய உலக சாதனை நிகழ்த்தினார். இதே போல் 50 மீ. பிரீ ஸ்டைல் நீச்சல் போட்டியிலும் 20.48 வினாடிகளில் இலக்கை எட்டி புதிய உலக சாதனையை படைத்தார். ஐந்து நாட்களுக்கு முன்பு 100 மீ. ஒலிம்பிக் சாம்பியனும் பிரான்ஸ் வீரருமான அலைன் பெர்னாட் 100 மீ. நீச்சலில் 45.69 வினாடிகளில் இலக்கை எட்டி புரிந்த சாதனையை தற்போது அமௌரி லெவோ முறியடித்துள்ளார் (5)

# முல்லைத்தீவில் மீண்டும் எறிகணைத் தாக்குதல்

## இடம்பெயர்வுகள் தொடர்கின்றன

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு நகரை நோக்கி நகர்ந்துள்ள இராணுவத்திற்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் கடும் சண்டைகள் நடைபெற்று வருவதாக களமுனைத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த மோதல்கள் காரணமாக இந்தப் பிரதேசத்தில் இடம்பெறுகின்ற கடுமையான எறிகணை தாக்குதல்களினால் முள்ளியவளை வற்றாப்பளை போன்ற இடங்களில் இருந்து மக்கள் இடம்பெயர்ந்து புதுக்குடியிருப்பு, விசுவமடு நோக்கி மக்கள் இடம்பெயர்ந்து கொண்டிருப்பதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

முல்லைத்தீவு வைத்தியசாலை அமைந்துள்ள மாஞ்சோலை பகுதிகளிலும் எறிகணைகள் வீழ்ந்து வெடிப்பதனால் அங்கு வைத்தியசாலை செயற்பட முடியாத நிலையும் அரச திணைக்களங்களைச் சேர்ந்தவர்களின் வசிப்பிடங்களில் இருக்க முடியாத நிலையும் ஏற்பட்டுள்ளது.

முல்லைத்தீவு நகரப்பகுதியில் தொடர்ந்தும் அரச செயலகங்கள் இயங்கி வருகின்ற போதிலும் அலுவலகங்களுக்கு அரச ஊழியர்களின் வருகை குறைந்திருப்பதாக முல்லைத்தீவு அரசாங்க அதிபர் திருமதி எமில்டா சுகுமார் கூறுகின்றார்.

இதேவேளை மாங்குளத்திலிருந்து ஒட்டுசுட்டான் நெடுங்கேணி முள்ளியவளை ஊடாக முல்லைத்தீவுக்குச் செல்லும் சாலையில் போக்குவரத்து செய்ய வேண்டாம் என இராணுவம் அதிகாரிகளுக்கு ஞாற்றுக்கிழமை அறிவித்திருப்பதாகவும் முல்லைத்தீவு அரச அதிபர் தெரிவிக்கின்றார்.

எனினும் வவுனியாவில் இருந்து ஓமந்தை சோதனைச்சாவடி ஊடாக புளியங்குளம்-நெடுங்கேணி-ஒட்டுசுட்டான் வழியாக முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு நகருக்கும் கிளிநொச்சி மாவட்டத்திற்குமான உணவுப் பொருட்களை ஏற்றிச் செல்லும் வாகனப் போக்குவரத்து நடைபெற்று வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

(ச-3)

## பொறிவெடிகளில் சிக்கி 4 அதிரடிப்படையினர் பலி

(மட்டக்களப்பு)

அம்பாறை கஞ்சிக்குடிச்சாறில் சிறப்பு அதிரடிப்படையினரின் அணி மீது தமிழீழ விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலில் நால்வர் கொல்லப்பட்டுள்ளனர்.

அம்பாறை மாவட்டத்தில் உள்ள கஞ்சிக்குடிச்சாறு வனப்பகுதி நோக்கி பாரிய தேடுதல் நடவடிக்கைக்காக சிறப்பு அதிரடிப்படையினரின் அணியொன்று களமிறக்கப்பட்டது.

இந்த அணி, தமிழீழ விடுதலைப் புலிகளின் பொறிவெடி வியூகங்களில் நேற்றுக் காலை 7.05 மணியளவில் சிக்கியது. இதில் நால்வர் கொல்லப்பட்டனர்.

இதனைத் தொடர்ந்து படையினர் கஞ்சிக்குடிச்சாறு வனப்பகுதியை நோக்கி கண்மூடித்தனமான துப்பாக்கிப் பிரயோகத்தினையும் செறிவான எறிகணைத் தாக்குதலையும் நடத்தினர் என விடுதலைப் புலிகள் தெரிவித்துள்ளனர்.

(ச-5)

## பிரபாகரனைப் பாதுகாக்க திட்டம் தேசப்பற்று இயக்கம் குற்றச்சாட்டு

(கொழும்பு)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் அரசாங்கத்தை ஸ்திரமற்றதாக்கி, படையினர் கிளிநொச்சியை கைபற்றுவதைத் தடுத்து பிரபாகரனைப் பாதுகாப்பதற்கு தேசிய மற்றும் சர்வதேச மட்டத்தில் சதித்திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இதனைத் தடுக்க மக்கள் ஓரணியில் திரள வேண்டும் என்று தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் கோரிக்கை விடுத்துள்ளது. ஐக்கிய தேசியக் கட்சி, ஜே.வி.பி. மற்றும் சர்வதேச தன்னார்வ நிறுவனங்கள் ஒன்றிணைந்தே இந்த சதித்திட்டத்தினை மேற்கொள்கின்றன என்று தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் தலைவர் குணதாச அமரசேகர தெரிவித்தார்.

கொழும்பு தேசிய நூலக ஆவணவாக்கல் சபை கேட்போர் கூடத்தில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

(ச-5)

## இந்திய அரசின்...

இராணுவத் தளபதி சரத் பொன்சேகா, தமிழகத் தலைவர்களை கோமாளிகள் என்று வர்ணித்தமை தொடர்பில் இலங்கை அரசாங்கத்தினால் மன்னிப்புக் கோரிய அறிக்கையொன்றையும் அவர் வலியுறுத்துவார் என அந்தச் செய்தித்தாள் குறிப்பிட்டுள்ளது.

எனினும் இராணுவத் தளபதி தமிழகத் தலைவர்களை கோமாளிகள் எனக் கூறவில்லை என்றும் அரசாங்கத்தின் சண்டே ஒப்சேவர் செய்தித் தாளின் ஆசிரியர், இராணுவத் தளபதி கூறிய விடயத்தை பிழையாகப் பிரசுரித்துள்ளார் எனக் கூறி சண்டே ஒப்சேவர் செய்தித்தாளின் ஆசிரியர் தினேஷ் வீரவன்ச பதவி விலக்கப்பட்டுள்ளார்.

இந்த நிலையில் இராணுவத் தளபதியின் கூற்றுத் தொடர்பாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மன்னிப்புக் கோர மாட்டார் என்றும் இந்தியா போர் நிறுத்தம் ஒன்றைக் கோரினால் அதற்கு இணங்கமாட்டார் என்றும் ஆங்கிலச் செய்தித்தாள் மேலும் குறிப்பிட்டுள்ளது.

### பிரணாப் முகர்ஜியின் விஜயம் இடம்பெறாது

அரசியல் தரப்புக்களில் பெரிதும் எதிர்பார்க் கப்படும் இந்திய வெளியுறவு அமைச்சர் பிரணாப் முகர்ஜியின் இலங்கை விஜயம் இந்த வாரத்தில் இடம்பெறாது என சண்டே ரைம்ஸ் தெரிவித்துள்ளது.

இதற்காக அந்த செய்தித்தாள் இந்திய உயர் ஸ்தானிகரகத்தின் பேச்சாளர் தினகர் அஸ்தானா மற்றும் இலங்கையின் வெளியுறவுத்துறை செயலர் பாலித கோஹன்ன ஆகியோரின் கருத்துக்களை பிரசுரித்துள்ளது.

இவர்கள் இருவரும் முகர்ஜியின் விஜயம் குறித்து என்னமும் உறுதியாக திகதி குறிப்பிடவில்லை எனத் தெரிவித்துள்ளனர்.

ஏற்கனவே கடந்த 4 ஆம் திகதி தமிழக முதல்வர் கருணாநிதி இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கை சந்தித்ததை அடுத்தே பிரணாப் முகர்ஜியின் இலங்கை விஜயம் குறித்த தகவல் வெளியாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

(ச-5)

## ஆட்களைக் கடத்தி...

கடத்தியது, மிரட்டிப் பணம் கோரியது மற்றும் அரச கட்டுப்பாடில்லாத பகுதிகளுக்கு தகவல்களை அனுப்பினார்கள் என்ற குற்றச்சாட்டுக்களின் கீழ் அவர்கள் கைது செய்யப்பட்டிருக்கின்றார்கள்.

கைது செய்யப்பட்டவர்களில் ஒருவர் கொழும்பு சிறப்புப் படையைச் சேர்ந்தவர். அவர் கொழும்பு வடக்குப் பிரிவுக்குப் பொறுப்பான தலைமை இன்ஸ்பெக்டர் மற்றைய இருவரும் இதே பிரிவில்தான் பணியாற்றுகிறார்கள்.

கைது செய்யப்பட்டிருப்பவர்களில் இரண்டு மூத்த அதிகாரிகள் சிங்களவர்கள். மற்றுமொருவர் தமிழர் என்றார்.

இதேவேளை கடத்தப்பட்ட வாகனங்களைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்துக்குள் இவர்கள் அனுப்பி வைத்தமையும் வர்த்தகர்களிடம் பெறப்படும் கப்பத்தில் ஒரு பகுதியைப் புலிகளுக்கு வழங்கி வந்தமையும் ஆரம்ப விசாரணைகளின் போது தெரியவந்துள்ளது. இவர்கள் மூவரும் கொழும்பு பெரும்பாகப் பொலிஸ் பிரிவிலேயே கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களின் கைது தொடர்பான தகவலை உறுதிப்படுத்திய பொலிஸ் வட்டாரங்கள் மேலும் சில பொலிஸ் உயர்மட்ட அதிகாரிகளுக்கும் புலிகளுக்குமிடையே சம்பந்தமிருக்கலாமென சந்தேகிப்பதாகத் தெரிவித்ததுடன் அவர்களும் விரைவில் கைது செய்யப்படுவரெனக் கூறியது.

கைது செய்யப்பட்டுள்ள இவர்கள் தொடர்பில் உடனடி விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

(ச-5)

## ஐ.தே.க கூட...

தெரிவிக்கப்படுகிறது.

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ், மேலக மக்கள் முன்னணி, சிறிலங்கா சுதந்திரக் கட்சி மக்கள் பிரிவு ஆகிய கட்சிகளுக்கு மேலதிகமாக வேறும் சில கட்சிகளை ஒன்றிணைத்து தேர்தலில் களமிறங்க ஐக்கிய தேசியக் கட்சி உத்தேசித்துள்ளது.

மேலும் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவை தேர்தல் பிரசார நடவடிக்கைகளில் ஈடுபடுத்த ஐக்கிய தேசியக் கட்சி திட்டமிட்டுள்ளதாக இரகசியத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

(ச-5)

## வன்னி படை நட...

படையணியானது வன்னி படை நடவடிக்கை தொடங்கப்பட்ட பின்னர் உரு வாக்கப்படும் 8-வது டிவிசன் ஆகும்.

இந்த புதிய படையணியின் கட்டளை அதிகாரியாக 56-வது படையணியின் பிரதி கட்டளைத் தளபதியான கேணல் அதுல கலகமே நியமிக்கப்பட்டுள்ளார்.

65-1 பிரிகேட்டின் கட்டளைத் தளபதியாக லெப்.கேணல் பிரிங்க பெர்னாண்டோவும் (இவர் 11-வது கெமுனுவோச் றெஜிமென்டைச் சேர்ந்தவர்), 65-2 பிரிகேட்டின் கட்டளை அதிகாரியாக லெப்.கேணல் ரன்ஜித் அபயரட்னவும் (இவர் 7-வது இலகு காலாட்படை றெஜிமென்டைச் சேர்ந்தவர்) நியமிக்கப்பட்டுள்ளனர்.

இதனிடையே, வன்னி படைக் கட்டமைப்பில் சில மாற்றங்கள் கொண்டு வரப்பட்டுள்ளன.

58-வது படையணியின் சிறப்புப் படை பிரிகேட்டின் கட்டளை அதிகாரியான லெப். கேணல் ஹரேந்திர ரணசிங்க 57-1-வது பிரிகேட்டின் கட்டளை அதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ளார்.

57-1 பிரிகேட்டின் கட்டளை அதிகாரி கேணல் ரவிப்பிரிய மன்னார் மாவட்ட கட்டளைத் தளபதியாக நியமிக்கப்பட்டுள்ளார்.

மன்னார் மாவட்ட கட்ளைத் தளபதியான பிரிகேடியர் சானா குணதிலக்க 56-வது படையணியின் கட்டளை அதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ளார்.

56-வது படையணியின் கட்டளை அதிகாரியாக மேஜர் ஜெனரல் ஜெகத் ரம்புக்கோத்த இந்தியாவின் தேசிய பாதுகாப்பு கல்லூரியில் பயிற்சி நெறிக்காக செல்லவுள்ளதனால் இந்த மாற்றங்கள் கொண்டுவரப்பட்டுள்ளன. (ச-5)

## இலங்கை மீது...

தலைவர் சாகுல் அமீது தலைமை தாங்கினார்.

அனைத்து வணிக் சங்கங்களின் பேரவை தலைவர் வெள்ளையன் மற்றும் பல்வேறு தரப்பினர் கலந்து கொண்டனர்.

உண்ணாவிரதத்தை விடுதலை சிறுத்தைகள் தலைவர் திருமாவளவன் தொடங்கி வைத்தார். ம.தி.மு.க பொதுச் செயலாளர் வைகோ உண்ணாவிரதத்தை முடித்து வைத்தார். அப்போது அவர்,

இலங்கையில் நடைபெறும் போரை இந்திய அரசு உடனடியாக நிறுத்த நடவடிக்கை எடுக்கவேண்டும்.

மும்பை தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலில் உயிரிழந்த 200 பேருக்காக பாகிஸ்தான் மீது போர் நடத்த வேண்டும் என்று கூறும் இந்திய வெளியுறவுத்துறை மந்திரி இந்திய கடல் எல்லையில் 400 மீனவர்களை குருவி சுடுவது போல் இலங்கை இராணுவம் சுட்டுக் கொன்றதே அதற்காக இலங்கை மீது போர் நடத்த வேண்டாமா?

எல்லாமே மனித உயிர்கள் தானே. தமிழக அரசியல்வாதிகளை இலங்கை இராணுவ அதிகாரி கோமாளிகள் என்று சொன்னபோது சம்பந்தப்பட்டவர் மன்னிப்புக் கேட்காமல் வெளியுறவுதுறை அதிகாரி டெல்லியில் உட்கார்ந்து கொண்டு வருத்தம் தெரிவித்ததாக கூறுகிறார்.

இது உண்மையில்லை என்று ஆவேசப்பட்டார் வைகோ.

(ச-5)

**PERSONAL CLASS**

புதிய கல்வியாண்டிற்கான 1-12 வரையான வகுப்பு மாணவர்களுக்கு English Personal Class ம், Spoken with Grammar கற்க விரும்பும் மாணவர்களுக்கு வீடுகளில் வந்து கற்பிக்கப் படும்.

*தொடர்புகளுக்கு:*

கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.

*T.P. No: 077 1880466*

(2003)

## தமிழக மக்கள்...

கொள்ளும் யுத்தத்தின் போது அப்பாவி தமிழ் பொது மக்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளதாக சர்வதேச ரீதியில் போலிப் பிரசாரம் மேற்கொள்ளப்பட்டுள்ளதென அவர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார்.

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்திலிருந்து தப்பி வரும் தமிழ் மக்களுக்கு உணவு வழங்குவதில் எவ்வித சிக்கல்களும் இல்லை என பாதுகாப்புச் செயலாளர் குறிப்பிட்டுள்ளார்.

(ச-5)

## இலங்கை இனப்பிரச்...

2009ஆம் ஆண்டுக்கான ஐ.நா. பாதுகாப்புச் சபையின் நிரந்தரமற்ற உறுப்பு நாடுகளில் 8 நாடுகள் அமெரிக்க ஆதரவு நாடுகளாகும்.

இது தவிர ஐ.நாவுக்கான புதிய அமெரிக்கத் தூதுவராக நியமிக்கப்படவுள்ள சுஸான் றைஸ் ஐ.நா. தலையீடுகளுக்கு ஆதரவான ஒருவர். இதனால் இலங்கையில் ஐ.நா. தலையீட்டுக்கான சாத்தியக் கூறுகள் அதிகம் இருப்பதாக கணிக்கப்படுகிறது.

2009 ஆம் ஆண்டுக்கான ஐ.நா. பாதுகாப்புச் சபை நிரந்தரமற்ற உறுப்பு நாடுகளாக, தீவிர அமெரிக்க ஆதரவு நாடுகளான ஒஸ்ரியா, ஜப்பான், மெக்சிக்கோ, உகண்டா, துருக்கி ஆகிய 5 நாடுகள் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

பாதுகாப்புச் சபையின் நிரந்தரமற்ற 10 உறுப்பு நாடுகளில் லிபியா, வியட்நாம் தவிர போர்கினா வாஸோ, கோஸ்ராறிக்கா, குரோசியா ஆகிய ஏனைய நாடுகளும் கூட அமெரிக்க ஆதரவு நாடுகளாகவே உள்ளன.

இதனால் இலங்கையின் மனித உரிமை மீறல்கள் குறித்து கடுமையாக விமர்சித்து வரும் சில ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் இந்த விடயத்தில் ஐ.நாவின் தீவிர தலையீட்டுக்கு அழுத்தம் கொடுக்கலாம் என்று எதிர்பார்க்கப் படுகின்றது.

இது தவிரவும், இனப்படுகொலைகள் மற்றும் போர்க் குற்றங்கள் நிறைந்த நாடுகளில் ஐ.நா. தலையீடு அவசியம் என்று வலியுறுத்தி வருபவரான சுஸான் றைஸ் அம்மையார் அமெரிக்காவின் புதிய ஜனாதிபதியான ஒபாமாவின் நிர்வாகத்தில் ஐ.நாவுக்கான அமெரிக்கத் தூதுவராக நியமிக்கப்படவுள்ளமை இந்தப் போக்குக்கு மேலும் வலுச் சேர்க்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்தக் காரணங்களால் 2009 ஆம் ஆண்டுக்கான ஐ.நா பாதுகாப்புச் சபையின் நிகழ்ச்சித் திட்டத்தில் இலங்கையும் உள்ளடக்கப்படலாம் என்றும் பாதுகாப்புச் சபையின் கடுமையான கண்டனத்துக்கு உள்ளாக நேரிடலாம் என்றும் இலங்கை வெளிவிவகார அமைச்சு அஞ்சுவதாக கொழும்பு ஆங்கில ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இலங்கைக்கு எதிராக மேற்கொள்ளப்படக் கூடிய இவ்வாறான நடவடிக்கைகளைத் தடுத்து நிறுத்துமாறு துருக்கியைக் கோரும் இரகசிய நோக்கத்துடனே இலங்கை ஜனாதிபதி அண்மையில் அங்காராவுக்கு விஜயம் செய்ததாகவும் அந்த ஊடகம் குறிப்பிட்டுள்ளது.

நிலைமை மோசமானால் ஐ.நா பாதுகாப்புச் சபையின் அனைத்து நிரந்தரமற்ற உறுப்பு நாடுகளுக்கும் இலங்கை உயர் மட்ட விஜயங்களை மேற்கொண்டு தமக்கு எதிரான தீர்மானங்களுக்கு ஆதரவு வழங்க வேண்டாம் என்று கோரலாம் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது.

(ச-5)

இப் பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3, 2 ஆம் ஒழுங்கை, பிறவுண்றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 15.12.2008 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.